சிவமயம்

குமரகுருபரன்



மலர் 13] சுபகிருது-௵ ஆவணி-மீ 1ம்-உ (17-8-62) [இதழ் 8

ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்,
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்

2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.

3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.,
பிரின்ஸ்பால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.

4. ராவ்சாஹிப், வித்துவான், திரு. கு. அருணாசலக் கவுண்டர் அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி.

5. திரு. ஆ. சி. ஷண்முகநயினார் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
வழக்கறிஞர், தென்காசி.

6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., B. L
(Verification Officer) இந்து அறநிலைய இலாகா,
20. நுங்கம்பாக்கம் ஹைரோடு, சென்னை - 6.

7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமாரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை



மலர் 13 | சுபகிருது-ஞு ஆவணித் திங்கள் 1-ம்வ [17-8-62] | இதழ் 8

சிதம்பரச் செய்யுட் கோவை

ஸ்ரீமத். சிவஞானத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

[முன்னைய முதுபெரும் புலவர்
உயர்திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்]

[கட்டுரை 60]

தில்லைச் சிதம்பரம், புலிக்கால் (வியாக்கிரபாத) முனிவரால் வழிபடப் பெற்ற காரணத்தால், 'புலியூர்' என்னும் பெயர் பெற்றது. தன்னை வணங்கும் மெய்யன்பர்க்குத் திருவடிப் பற்றினைப் பெருக்கும் ஏதுவால், 'பெரும்பற்றப் புலியூர்' என்று வழங்கலாயிற்று. 'திருவடிப்பற்று' என்பதால் ஊன்றிய திருவடிப்பற்றும் கொள்ளலாம். அதன் பற்று விடுபயவாது, எடுத்த திருவடிப்பற்றே உயிர்க்கு விடுபேறளிக்க வல்லது. 'ஆடஎடுத்திட்ட பாதம் அன்றோ நம்மை ஆட்கொண்டதே' என்பது திருநாவுக்கரசர் அருளிய திருவிருத்தத்தின் கண்ணது. ஆசிரியர் குமரகுருபர முனிவரரும்,

"ஈட்டிய வினைப்பயன் எவற்றையும் மறைத்துநின்று
ஊட்டுவ தாகும்நின் ஊன்றிய பதமே;
அடுத்தஇன் னுயிர்கட்கு அளவில்பே ரின்பம்
கொடுப்பது முதல்வநின் குஞ்சித பதமே."

என்று, நடராசப்பிரானது மெய்த்தொழில் ஐந்தும் உணர்த்தும் இடத்தில், கைத்தொழில் ஆகிய முத்தொழிலும் கூறிய பின்னர்க் காற்றொழில்இரண்டும் கூறியவாறு இவ்வாறு. இவ்வுண்மையை 'உண்மை விளக்கம்' என்னும் மெய்கண்ட நூலில்,

"தோற்றம் துடியதனில்; தோயும் திதிஅமைப்பில்;
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்;—ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோதம்; முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு."

என்று விளக்கியிருத்தல் காண்க. துடி (உடுக்கை) யிற் படைப்பு; அபயஹஸ்தத்தில் காப்பு; தீயில் அழிப்பு; ஊன்றிய திருவடியில் மறைப்பு; தூக்கிய திருவடியில் அருள்வு. இதிற் கூறிய முதல் முத்தொழிலும் கைத்தொழிலாக அடங்குதலின், துடியேந்திய திருக்கையைக் குறித்து,

"பூமலி கற்பகப் புத்தேள் வைப்பும்
நாமநீர் வரைப்பின் நால்நில வளாகமும்
ஏனைப் புவனமும் எண்நீங் குயிரும்
தானே வகுத்ததுன் தமருகக் கரமே"

என்றும், அபயத்திருக்கையைக் குறித்து,

"தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
அனைத்தையும் காப்பதுன் அமைத்தபொற் கரமே."

என்றும், தீ ஏந்திய திருக்கையைக் குறித்து,

"தோற்றுபு நின்றஅத் தொல்லுல கடங்கலும்
மாற்றுவது ஆரழல் வைத்ததோர் கரமே"

என்றும் கூறியவாறுணர்க. உணரவே, பெரும் பற்று விளையப் பெறுதல் விட்டின்பம் பெறற்கே என்பது தெளிவாகும்.

அப் பெரும்பற்றப்புலியூரானைப் பேசாதநாள் எல்லாம் நாம் உடம்போடிருப்பினும் அவ்வுடம்பை இறந்தநாளே ஆகும், அஃதாவது 'பிறவா நாளே.'

'பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே'

என ஒருமுறைக்குப் பத்துமுறையாகப் பேசிய திருநாவுக்கரசர், ஆராமையால், மேலும் வாய்த்த இடத்தில், பாழ்த்த பிறப்பு ஒழித்திடுவான், பாடிய திருப்பதிகங்களுள்,

"துறந்தார்தம் தூநெறிக்கட் சென்றேன் அல்லேன்
துணைமாலை சூட்டநான் தூயேன் அல்லேன்
பிறந்தேன்நின் திருவருளே பேசின் அல்லால்
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே"
"மறந்தும்அரன் திருவடிகள் நினையமாட்டா நாளும்
மதியிலியேன் வாழ்வெலாம் வாளாமண்மேற்
பிறந்தநாள் நாள்அல்ல வாளா ஈசன்
பேர்பிதற்றிச் சீரடிமைத் திறத்துள் அன்பு
செறித்தெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே."

என்றும் திருவாய்மலர்ந்தருளினர்.

இவற்றிற்கு முன்னரும், திருநாகைக்காரோணத்திலே,

"கற்றவர் பயிலும் நாகைக் காரோணம் கருதி ஏத்தப்
பெற்றவர் பிறந்தார்; மற்றுப் பிறந்தவர் பிறந்திலாரே".

என்று வெறுத்த சொல் போல நிறுத்த சொல்லால் உணர்த்தி யருளினர்.

'பெரும்பற்றப்புலியூர்நம்பி' என்னும் திருப்பெயர்வழக்க மும், அத்திருப் பெயர்வாய்க்கப் பெற்ற பெரிய சிவப்பற்றுடைய (நாவலர் பாவலர் புலவர்) ஒருவர், தமது நூலில்,(திருவிளையாடற் புராணத்தில்) பெயர்ச்சந்தத்திற்குத் தக்க தொடர் அமையப் பாடிய தலைமைத் துதிப்பாடலும் ஈண்டுணர்தல் சைவப்புலவர்க்கு நல்ல இன்பம் நல்கும். அஃது இஃது:

"நிறங்கட்கப் புறநாதன் நினைந்துட்சிற் கனருகிச்
செறிந்தச்சித் திரகாயந் திருந்தக்கட் செவிகாண
அறங்கட்குப் புகலாகும் அகண்டப்பொற் பொதுநாளும்
பிறங் கப்பொற் புடனுடும் பெரும்பற்றப் புலியூரே."

இவ்வாறே அவ்வாசிரியர் திருச்சிற்றம்பலம், திருவம்பலம். பொன்னம்பலம்என்பவற்றிற்கும்பாடிய அருமை அறியற்பாலது.

சிதம்பர ரகசியங்களைத் தொகுத்துணர்த்தும் ஓரகவற்பாவில் வேதம் ஆகமம் அனைத்தும் (கனகசபையின்) திருக்கோயில் வடிவாக விளங்கும் உண்மையை உணர்த்துகின்றது. அதை நோக்குவோர்க்கு 'மறைதங்கு திருமன்று' என்றதன் கருத்து இனிது புலப்படும். இங்கு அவற்றை விரித்தற்கு இடம் இல்லை. நடராசப்பிரான் வேத சொருபியாதலின், மறைதங்கு திருமன்று என்ருர் எனக் கொணடுரைத்தல் சிறந்ததன்று.

கறைதங்கு படம் என்றது நஞ்சு பொருந்திய படம்; நல்ல பாம்பிற்கு இயல்பாக உண்டு. பதஞ்சலி முனிவர் பாம்பின் கால் மட்டும் உடையவர். அவர்க்குக் கறைதங்குபடம் இல்லை. இன்றேனும், பாம்பிற்குச் சாதியடையாகக் கொள்ளல் வேண்டும். கறைதங்கு படஅரவம் எனினும், இங்கு அதன் கால் மட்டும் அமைந்த பதஞ்சலி முனிவரைக் கொள்க.

இமையாது கண்விழிப்பது பாம்பிற்கு எளிது. 'கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்என்ன கண் ணே' என்ருர் இளங்கோவடிகள். மக்கள் இமையாது கண்விழிக்க வல்லார் அல்லர். திருவெண்காட்டுப் பெருநிலக்கிழார் 23—7—62 காலையில், அவர்கள் வீட்டில், பேசிக்கொண்டிருந்த போழ்து, 'கண் விழிப்பு' என உலகம் வழங்குவது ஏன்? விழிப்பு என்ருல் போதாதா? 'வயிற்றைப் பசிக்கிறது' என்னும் பிழை வழக்குப் போல்வதன்ருே இது என்று சொன்னுர் (உயர்திரு. தி. மு. சீநிவாசப் பிள்ளை அவர்கள் கூறிய வாறும் தருக்க சாத்திரக் கொள்கையின்படியும் வேண்டாத சோற் சேர்க்கை குற்றமுடையதேயாகும்) உலக வழக்கிற் கொள்ளத் தக்கனவும் உள. அவற்றுள் ஒன்ருகும் இது எனக்கொள்வர். அத்தகையது அன்று இது. 'கட்செவி' என்பது பாம்பின் பெயர்களுள் ஒன்று. அப்

பெயர்க்குப் பொருள் இருதிறமாகக் கொள்ளப்பட்டது நம் முன்னோரால். (1) "கண்ணையே காதாக உடையது" (2) "கண்ணாற் காணும் அளவு செவியாற் கேட்கவல்லது" என்னும் இரண்டும் 'கட்செவி' என்றதன் பொருளாகும். 'ஞானுமிர்தம்' என்னும் சைவசித்தாந்த நூலின் உரையாசிரியர் இரண்டாவது பொருளைக் கொண்டார். தூங்கும் ஒருவன் ஒரு பேரொலியைச் செவியாற் கேட்டதும் (கண்) விழிப்பதுண்டு. ஒலியைக் கேட்டன செவிகள். விழித்தன கண்கள். பாம்போ கண்ணுல் கேட்டலும் விழித்தலும் உடைமையின், 'கண்விழிப்ப' என்றது முதற் பொருளை நோக்கி என்று நாம் கண்விழிக்க வேண்டும். திருக் கூத்துக் காட்சியால் மகிழ்பூத்தல் சிதம்பர தரிசநாநுபவம் உடையார்க்கு விளங்கும் பெருமையது. அப்பெருமையின் எல்லை பதஞ்சலி முனிவர்க்கே வெளிப்படையானது. பாம்பு திங்களை விழுங்கும் என்றல் கவிமரபு. பெருமான் திருமுடியில் பாம்பும் உளது. திங்களும் உளது. 'மாதர்ப் பிறைக் கண்ணி யான்' முடிமேல் கறைப்பாம்பும் கண்ணியாகும். ஆதலாற்ருன் 'திருமுடியிற் கண்ணியும் மாலையும் பாம்பு' என்ருர் இந்நூலில் (பா. 4). அக்கறையரவுக்கு அஞ்சுருது இறைவி நறுநுதலைக் கண்டு அஞ்சுறூஉம் திங்கள். நடம் உவந்த காற்புலிக்கு அஞ்சாது அம்மான் விழிமானைக் கண்டு அஞ்சும் (பிறைமுடி யோன்) கைம்மான் செயல் போலும் செயலுடையது. அதாவது பகைக்கு அஞ்சாது இனத்திற்கு அஞ்சுவது என்றபடி (பா. 5). திருமுடியிற்பாம்பு விழுங்கும் என்று அஞ்சுதல் இல்லாத அப் பிறை, திருமன்றின் நடம்கண்டு மகிழ்பூத்து இமையாது கண் விழிக்கும் (பதஞ்சலி முனிவராகிய) பாம்பை நோக்கி அஞ்சியது. கலைக்குறைவு உடைய நாம் கலை நிறைவு பெற்ருேம் ஆயின், இப்பாம்பு நம்மை விழுங்கும் என்று ஐயமும் அச்சமும் உற்றது பிறை. அதனுல், பௌர்ணமியன்று விளங்கும் முழுவடிவைத் தான் அடையாமலே என்றும் குறைமதியாகவே இருக்கும் வறுமையை உற்றிருக்கும் துணிவு கொண்டு அஞ்சாமையை எய்திற்று. அப்படி எய்தியதாக யாம் கண்டிலோம். குமர குருபர முனிவர் திருவாய்மொழி அது. "குறைதங்குகலை, நிறை யின், கறைதங்குபட அரவம் (பதஞ்சலி) கோள் (-விழுங்கிக் கொள்ளும் தீங்கை) இழைக்கும் (-செய்யும்) என்று நிரப்பு

(-வறுமையை) எய்தும்; நிறைதங்குதலை உவவு (-பூர்ணிமைக் குரிய பூரண ருபத்தைப்பெற்று) நிரம்பாது" என்றதை உணருங்கள்; இன்பம் எய்துங்கள் நீங்கள். பாம்பு துன்பம் எய் தினும்,

மறைதங்கு திருமன்றி னடங்கண்டு மகிழ்பூத்துக்
கறைதங்கு படவரவ மிமையாது கண்விழிப்பக்
குறைதங்கு கலைநிறையின் கோளிழைக்குங் கொல்லென்று
நிறைதங்கு தலையுவவு நிரம்பாது நிரப்பெய்தும்

பிறை எனச் சிறுபிறைக்கு நாலடியளவு பேரடை கொடுக்கும் ஆற்றல் எப்புலவர்க்கு உண்டு? அப்,

"பிறைதங்கு சடைக்கற்றைப் பெரும்பற்றப் புலியூரோய்."

என அழைத்து, சிவகாமியம்மையார் கூறினவாக மூன்று குறிப் புக்கள் உள. அவை இவை,

எனவாங்கு

— தாழிசை —

1 வெள்ளெருக்குங் கரும்பாம்பும் பொன்மத்து மிலைச்சியெம
துள்ளிருக்கும் பெருமானின் றிருமார்பி னுறவழுத்தும்
கள்ளிருக்குங் குழலுமையாண் முலைச்சுவட்டைக்கடுவொடுங்கும்
முள்ளெயிற்ற கறையரவ முழையென்று நுழையுமால்.

அதாஅன்று

2 சிலைக்கோடு பொருமருப்பிற் புகர்முகனின் றிருமார்பில்
முலைக்கோடு பொருசுவட்டைக் கண்டுநின் முழவுத்தோள்
மலைக்கோடி விளையாடும் பருவத்து மற்றுத்தன்
கொலைக்கோடு பட்டவெனக் குலைந்துமனங் கலங்குமால்.

அதாஅன்று

3 விடமார்ந்த சுடரிலைவேல் விடலைநின் மணிமார்பில்
வடமார்ந்த முலைச்சுவட்டைக் கண்டுதன் மருப்பெந்தை
தடமார்பம் விடர்செய்யச் சமர்செய்தான் கொல்லென்று
கடமார்வெங் கவுட்சிறுகட் கயாசுரனை வியக்குமால்.

அதனுல்

— சுரிதகம் —

சிலைமுகங் கோட்டுமச் சில்லரித் தடங்கண்
முலைமுகங் கோட்டின ணகுமால்
மலைமுகங் கோட்டுநின் மற்புய மறைந்தே.

1. வெள்ளெருக்கம் பூவும் கரும் பாம்பும் பொன்மத்தம் பூவும் சூடி எம்உள்ளத்திற்குடி கொண்டிருக்கும் சிவபெருமானே! உன் திருமார்பில், அம்பிகையின் திருக்கொங்கை அழுந்திச் செய்த அடையாளத் தழும்பை உனது சர்ப்பாபரணம் கண்டு தன் வளையாகும் எனக் கருதிக் கொண்டு நுழையுதே.- (அது நிற்குறிப்பும் அன்று எற்குறிப்பும் அன்று. 'கடுஒடுங்கும் முள் எயிற்ற கறை அரவம்' ஆகிய தற்குறிப்பே.)

(2) விநாயகப் பெருமான், அக்கொங்கைத் தழும்பை நோக்கினுன். தன் இளம்பருவத்தில் உன் மலைத்தோள் மேல் ஏறிவிளையாடிய பொழுது தன்கொம்புகள் பட்ட தழும்பு என்று உட்கொண்டான். அதனுல் அன்று செய்த (குழவிப்பருவத்துச்) செய்கைக்கு இன்று (இக்காளைப் பருவத்துக்) கலக்கம் உற்ருன்.

(3) முருகப்பெருமான் அச்சுவட்டை அறிந்தான். 'கஜாசுரன் எந்தையொடு போர் புரிந்த போது, எந்தையின் திருமார்பில் ஒருவிடர் (வெடிப்புப் போன்ற பள்ளம்) உண்டாகச் செய்யும் ஆற்றல் உடையவனுக இருந்தானே' என்று அவ்வசுரனை வியந்தான். அம்மையார் நாணிக்குனிந்து, தமக்குள் நகைப்பும் உற்று நின்ருர்; ஐயனுர்மலைத்தோளின் மறைவில் நின்று.

(தொடரும்)

மதுரைக் கலம்பகம் உரைநடை

தருமபுர ஆதீன வித்துவான்,
"திருவண்ணாமலை ஆதீனவிரிவுரையரசு, மதுரை ஆதீனச் சித்தாந்த
சைவ வித்தகர், சித்தாந்தப் புலவர்மாமணி, பாலகவி"
வயிநாகரம், திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

[மலர் 13, இதழ் 7-ன் தொடர்ச்சி]

மட்டறுக டற்புவிய னைத்துமொரி மைப்பினின்ம
றைத்துடன்வி டுத்தி டுவன்மற்
றெட்டுவரை யைக்கடலை முட்டியுள டக்கிடுவ
னித்தனையும் வித்தை யலவால்
துட்டமத னைப்பொடிப டுத்திமது ரைக்குளுறை
சொக்கர்குண மெட்டி னெடுமா
சிட்டர்கடு தித்திடும கத்துவம னைத்துமொரு
செப்பினுள டக்கி டுவனே. 82

அளவில்லாத கடல்களினால் சூழப்பட்ட பூமி முழுவதையும் ஒரு நொடிப்பொழுதுக்குள்ளே மறையவைத்து உடனே மீண்டும் தோன்றும்படி செய்து விடுவேன். இன்னும் எட்டு மலைகளையும் கடலையும் கைப்பிடியினுள்ளே அடங்க வைத்து விடுவேன். (எள்ளையும் துவரையையும் கடலையையும் கைப்பிடியினுள்ளே அடக்கி விடுவேன்.) இவ்வளவும் எங்கள் திறமைக்கு அவ்வளவு பெரிய வித்தையல்ல. கொடிய மன்மதனைச் சாம்பலாகும்படி எரித்து மதுரை நகரத்திலே எழுந்தருளியிருக்கின்ற சொக்கலிங்கப் பெருமானது எட்டுக் குணங்களோடுங் கூடிய பெரிய அடியார்கள் துதிக்கின்ற சிறப்புக்களனைத்தையும் ஒரு சிமிழினுள்ளே அடக்கி விடுவேன். (ஒப்பற்ற திருவைந்தெழுத்தாகிய ஒரு சொல்லினுள்ளே அடக்கி விடுவேன்)

அடுத்த பதஞ்சலியா ரஞ்சலியா நிற்ப
எடுத்த பதஞ்சலியா ரேனும் – தடுத்தவற்கா
மாறிக் குனித்தார் மலைகுனித்தென் மாமதனுர்
சீறிக் குனித்தார் சிலை. 83

அடுத்து அடைந்த பதஞ்சலி மகாமுனிவர் கைகூப்பித் தொழுது நிற்கத் தூக்கிய திருவடி சலியாமல் திருக்கூத்தாடினு ராயினும் கால்மாறியாடும்படி வருந்தி வேண்டிய இராசேந்திர பாண்டியனுக்காக வெள்ளியம்பலத்திலே கால் மாறியாடிய சொக்கலிங்கப் பெருமான் மேருமலையை வில்லாக வளைத்ததனுல் பயனென்ன? வலிமை பொருந்திய மன்மதனுர் கோபித்து வில்லை வளைக்கின்ருரே?

சிலையோ கரும்புபொரு கணையோ வரும்புசிவ
சிவவாவி யொன்று முளதோ
இலையோ அறிந்திலமிம் மதனுண்மை யென்புகல்வ
திதுவேத வம்பி றிதெனு
முலையே யணிந்தமுகிழ் நகையீரொர் பெண்கொடியின்
முலையோடு முன்கை வளையால்
மலையே குழைந்திடுத மிருதோள் குழைந்துறைநம்
மதுரேசர் தந்த வரமே. 84

முல்லை அரும்புகளை ஒத்த புன்முறுவல் பூக்கும் பற்களை உடையவர்களே! ஒப்பற்ற பூங்கொடி போன்ற காமாட்சியம்மை யினது கொங்கைகளோடு முன்கைகளில் அணிந்திருந்த வளை களால் மலையுங் குழையும்படி செய்த தமது இருதோள்களும் குழையுமாறு நின்ற நமது மதுரைக்கிறைவராகிய சொக்க லிங்கப் பெருமான் கொடுத்தருளிய வரத்தையுடைய மன்மதனது ஆண்மையை என்னவென்று சொல்லுவது? அவனது வில்லோ கரும்பு; அம்போ அரும்பு. சிவ சிவ. அவ்வம்பு பாய்ந்த இவளது உயிராகிய ஒன்று இருக்கிறதோ இல்லையோ தெரிய வில்லை. இவனது தவமே தவம். வேறு என்ன ஆகும்!

வரும்புண்ட ரீக மிரண்டாலொர் கல்லுமென் வன்னெஞ்சமாம்
இரும்புங் குழைத்த மதுரைப் பிரான்வெற்பி லேழ்பரியோன்

விரும்புந் தடமணித் தேர்வல வாவெஞ் சுரமிதன்றே
கரும்புங் கனியு மிளநீரும் பாரெங்குங் கண்களினே. 85

பொருந்திய இரண்டு திருக்கரங்களும் இரண்டு திருவடிகளுமாகிய செந்தாமரை மலர்களாலும் மேருவாகிய ஒரு மலையையும் எனது வலிய மனமாகிய இரும்பையும் குழையும்படி செய்த மதுரைச் சொக்கநாதரது மலையிலுள்ள ஏழு குதிரைகளை உடையவனாகிய கதிரவனும் விரும்பும்படியான பெரிய அழகிய தேரைச் செலுத்துதலில் வல்ல பாகனே! இந்த இடம் வெப்பத்தையுடைய கொடிய பாலை நிலமல்லவா? இங்கே எல்லா இடத்திலும் கரும்பையும் பழத்தையும் தெங்கிளங்காயையும் கண்களினாற் காண்பாயாக.

(கரும்பு – தலைவியின் இன்சொல்; கனி – அதரம்; இளநீர்–கொங்கை).

கருவிட்ட காடெறிந்து கடம்பவனத் திருப்பீர்நுங்
கடுக்கைக் காட்டின்
மருவிட்ட கொள்ளைவெள்ள மடுப்படிந்து முண்டெழுமால்
மதித்தீ கெட்டேன்
செருவிட்ட விழிமடவார் வாயிட்டுச் சுடுவதல்லாற்
செங்கை யீட்டும்
எருவிட்டு முட்டிடநீர் விறகிட்டு முட்டியவா
வென்சொல் கேனே. 86

அடியார்களுக்குக் கருப்பமாகப் பொருந்திய காட்டை வெட்டிக் கடம்ப வனத்திலே எழுந்தருளி யிருப்பவரே! திங்களாகிய நெருப்பு, உமது கொன்றைப் பூக்கற்றையின் நறுமணம் பொருந்திய பெருவெள்ளமுள்ள கங்கை யாற்றின் மடுவிலே மூழ்கி மேலே எழும். கெட்டேன்! போர் செய்கின்ற கண்களை யுடைய பெண்கள் தமது வாயாற் சொல்லும் பழிச் சொல்லால் என்னைச் சுடுவதல்லாமல் சிவந்த தமது கைகளினாற் சேர்க்கப் பெறுகின்ற எருக்களைப் போட்டு அம்மதித்தீயை மூட்ட நீர் விறகைப் போட்டு வளர்த்த விதத்தை என்னவென்று சொல்லுவேன்?

என்போ டுள்ள முநெக்குரு கப்புக் கென்போல்வார்க்
கன்போ டின்பு மளித்தருள் கூடலெம் மடிகேளோ

தன்போற் காமன் சாபமு டித்தாற் ருழ்வுண்டே
முன்போர் காமன் சாபமனைத்து முடித்தாய்க்கே. 87

எலும்பும் மனமும் நெகிழ்ந்து உருகும்படி எழுந்தருளி என்னைப் போன்ற இளமங்கையர்க்கு அன்பையும் இன்பத்தையும் வழங்கியருளுகின்ற கூடற்பதியிலே யுள்ள எமது ஆண்டவனே! முன்னாளில் ஒப்பற்ற கற்பகச் சோலைக்கு மன்னனாகிய தேவேந்திரனது சாபம் முழுவதையும் ஒழித்தருளிய உனக்குத் தனக்குத் தானே ஒப்பாகிய மன்மதனது வில்லை அழித்தருளினால் குறை உண்டாகுமோ?

முட்டாட் பாசடை நெட்டிதழ்க் கமலத்
திரைவர வுறங்குங் குருகு விரிசிறைச்
செங்கா ணுரைக்குச் சிவபதங் கிடைத்தெனப்
பைம்புனன் முழ்கிப் பதும பீடத்
தூற்றமி ருமு முலப்பில பஃறவம்
வீற்றுவீற் றிருந்து நோற்பன கடுக்குங்
குண்டுநீர்ப் பட்டத் தொண்டுறைச் சங்கமும்
வண்டமிழ்க் கடலின் றண்டுறைச் சங்கமு
முத்தகம் பயின்று காவியங் கற்றுச்
சித்திரப் பாட்டிய றேர்ந்தன செல்லுந்
தடம்பணை யுடுத்த தண்டமிழ்க் கூட
லிடங்கொண் டிருந்த விமையா முக்கட்
கருமிடற் றொருவநின் றிருவடி வழுத்துதுந்
தாய்நலங் கவருபு தந்தையுயிர் செகுத்தாங்
கிருபெருங் குரவரி னொருபழி சுமந்த
புன்றொழி லொருவற்குப் புகலின்மை தெரீஇ
யன்றருள் சுரந்த தொன்றோ சென்றதோர்
வலியாற் கருள்வதூஉ நோக்கி
யெளியார்க் கெளியைமற் றென்பது குறித்தே. 88

முள்ளை உடைய தண்டையும் பசுமையாகிய இலையையும் நீண்ட இதழையும் உடைய தாமரைப்பூவிலே உணவுக்கேற்ற பெரிய மீன்கள் வருமளவும் தூங்குவன வற்றைப்போல் இருக்கின்ற நாரைகள் விரிந்த சிறகுகளையும் சிவந்த கால்களையும்

உடைய நாரைக்குச் சிவபதங் கிடைத்த இடம் இதுவென்று எண்ணிப் பற்றுக் கோடில்லாத தாங்களும் குளிர்ந்த நீரிலே மூழ்கிப் பதுமாசனத்தில் இருந்து ஒழிவு இல்லாத பலவகைத் தவங்களைத் தனித்தனியே செய்வனவற்றை ஒத்த ஆழமாகிய நீரை உடைய பொற்றாமரைக் குளத்தின் ஒளிபொருந்திய நீர்த் துறையிலே உள்ள சங்குகளும் வளப்பத்தை உடையதமிழ்மொழி யாகிய கடலினது தண்ணிய துறைகளிலே பயின்ற தலை, இடை, கடை என்னும் மூன்று சங்கங்களும் முத்துக்கள் தம்மிடத்திலே பயிலப்பெற்றுச் (முத்தகச் செய்யுட்களில் பழகி) சோலைகளில் இயங்குதல் இல்லாமல் (காப்பியங்களைக் கற்று) சிறந்த இசை யின் கூறுபாடுகளை ஆராய்ந்து ஒலித்தனவாகி (பலவகைப்பட்ட பாட்டிலக்கண நூல்களை ஆராய்ந்து அறிந்தனவாகி) உலாவு கின்ற (ஒழுகுகின்ற) அகன்ற வயல்களால் சூழப்பெற்ற இனிய தமிழ் வழங்குகின்ற மதுரையை இடமாகக் கொண்டிருந்த இமைத்தல் இல்லாத மூன்று கண்களையும், கருமையான கழுத் தையும் உடைய ஒப்பற்ற கடவுளே! தாயினிடத்து இன்பத்தை நுகர்ந்து தந்தையின் உயிரைக் கொன்று அதனால் இருபெருங் குரவரிடத்தும் ஒப்பற்ற பழியையும் பாவத்தையும் ஏற்றுக் கொண்ட இழிந்த செய்கையையுடைய ஒருவனுக்கு வேறுபுகலிட மில்லாமையை அறிந்து அந்நாளில் கருணைகூர்ந்து அருளியது ஒன்று மாத்திரமோ? வந்து சரணடைந்த ஒரு கரிக் குருவிக்குத் திருவருள் செய்ததையும் பார்த்து எளியவர்க்கு எளிதில் அருள் செய்யும் தன்மையை உடையாய் என்பதை எண்ணி உனது திருவடிகளை வணங்கித் துதிக்கின்றோம்.

(தொடரும்)

காப்பிய காலச் சைவம்

திருமதி ப. அமிர்தம் அவர்கள், எம். ஏ.,
மதுரை.

பல்லுயிரும் பலவுலகும் படைத்துக் காத்து அழித்தருளும் பரம்பொருளை மக்கள் பல்வேறு காலங்களில் பல்வேறு நெறி களில் நின்று வழிபட்டு வந்தனர்;— வருகின்றனர். இங்கு காப்பிய காலம் என்பது சீரிய கற்பிற்கோர் செந்தமிழ்க் காப்பிய மாய்த் திகழும் சிலப்பதிகாரமும், அதனை அடுத்து எழுந்த மணிமேகலையும் தோன்றிய காலத்தையே குறிக்கும். இக் காப்பியங்கள் இரண்டும் கூறும் செய்திகள்–அக்காலத் தமிழ ரின் பண்பாடு, ஒழுகலாறு, அரசுமுறை எனப் பலவாக இருப் பினும், அக்காலச் சமயநிலை பற்றி அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிவனுக்கு முதலிடம் : – பண்டைத் தமிழ் இலக்கியங்கள்-சிறப்பாகச் சங்க இலக்கியங்களனைத்தும் தொல்காப்பியத்தின் எல்லைக்குட்பட்ட கருத்துக்களையே வெளியிடுபவைகளாயுள்ளன. எனவே உலகியல் குறிப்புக்களாகிய அரசியல், வாணிபம், கலை போன்றவை பற்றிய செய்திகளை விரிவாகக் காண்டல் அரிது. அவை பற்றிய தனி இலக்கியங்களும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆங்காங்கே அமைந்து கிடக்கும் குறிப்புக்கள் வாயிலாகவே அவற்றை அறிந்து கொள்கிறோம். அவ்வாறே சமயக் கருத் துக்களும் மிகுதியாகக் கிடைக்க வில்லையாயினும், கிடைத்த சிலவற்றைக் கொண்டு நோக்குமிடத்து, அக்கால மக்கள் சீரிய சமய உண்மைகளைக் கற்றுணர்ந்த மெய்யறிவுடையோராய்த் திகழ்ந்தனர் என்பதை அறியலாம். நக்கீரர் என்னும் புலவர் பாடிய புறப்பாட்டு ஒன்று சிவபெருமான், பலராமன், திருமால், முருகன் ஆகிய கடவுளர் நால்வரையும் குறிப்பிடுகின்றது. இந்நால்வரைப் பற்றிச் சிலம்பும் கூறுகின்றது. இதனை,

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்."

என்று இந்திரவிழவூரெடுத்த காதையிலும்,

"நுதல்விழி நாட்டத்து இறையோன் கோயிலும்
உவணச் சேவ லுயர்த்தோ னியமமும்
மேழி வலனுயர்த்த வெள்ளை நகரமும்
கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்."

என ஊர் காண் காதையிலும் வரும் அடிகளால் உணரலாம். இந் நால்வகைக் கடவுளருள்ளும் சிவனே முதலிடம் பெற்றுள்ளான் என்பது தெளிவாகும். மணிமேகலையும் "நுதல் விழி நாட்டத்து இறையோன் முதலாப், பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறாக" என்று குறிப்பிடுவதனுல் அங்கும் சிவனுக்கே முதலிடம் வழங்கியுள்ளார் ஆசிரியர் என்பதை அறியலாம். இவ்விரு பெரும் ஆசிரியர்களும் சிவபெருமானுக்கு முதலிடம் அளித்துள்ளதோடு, சமணம், பௌத்தம், வைணவம் போன்ற சமயக் கருத்துக்களையும் வெளியிட்டுள்ளனர். இச்சமயங்கள் அனைத்தையும் ஒப்ப வைத்து, வேற்றுமை பாராட்டாது, ஆசிரியர் இளங்கோவடிகள் கூறிச் செல்வது ஆசிரியரின் சமயப்பொது நோக்கினைப் புலப்படுத்தும். தண்டமிழாசான் சாத்தனுரோ, வேறு பாடின்றி, ஒன்றிய சமய நெறியில் ஒரே சமுதாயமாய் வாழ்ந்த காலத்து, பௌத்த சமயமே பிற சமயங்களனைத்தினும் சிறந்தது என்னும் கருத்தினை வலியுறுத்துவதன் மூலம் பிற சமயக் காழ்ப்புக்கு வித்திடுகின்றுர் என்பதும் நன்கு புலனுகும்.

இனி இந்த இரண்டு நூல்களிலும் 'சிவன்' என்னும் சொல் குறிக்கப் படவில்லையாயினும், 'சைவம்' என்னும் சொல் மணிமேகலையில் காணப்படுகின்றது. வஞ்சிமா நகரை அடைந்த மணிமேகலை சமயவாதிகள் பலரைக் கண்டு அவர்களுடைய கொள்கைகளை அறிந்து கொள்வதாகக் காப்பியத்தில் கூறப்படுகின்றது. அச்சமய வாதிகளுள் 'சைவவாதி'யும் ஒருவனுகும். அவனது கூற்றாக ஆசிரியர்,

"இருசுடரோடு இயமானன் ஐம்பூதமென்று
எட்டு வகையும் உயிரும் யாக்கையுமாய்க்
கட்டிநிற் போனும் கலையுருவி னேனும்
படைத்து விளையாடும் பண்பி னேனும்
துடைத்துத் துயர்தீர் தோற்றத் தோனும்
தன்னில் வேறு தானென் றிலோனும்
அன்னேன் இறைவனுகும்."

என்று சிவனைக் குறிப்பிடுகின்ருர்.

இளங்கோ வடிகள் தம் தமையனுகிய சேரன் செங்குட்டுவன் சிவபெருமான் திருவருளால் பிறந்தவன் என்பதைச் செஞ்சடை வானவன் அருளில் தோன்றியவன் என்றும், ஆனேறு ஊர்ந்தோன் அருளில் தோன்றியவன் என்றும் கூறுகின்ருர். கற்புக்கடம் பூண்ட பொற்புடைத் தெய்வமாகிய கண்ணகிக்குக் கோயில் எழுப்புதற்கு கல் எடுத்து வரும் பொருட்டு வட நாடு புறப்பட்ட செங்குட்டுவன், ஆடகமாடத்து அறிதுயிலமர்ந்த திருமாலின் சேடங்கொண்டு வந்து நின்று துதித்த போது, தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுளின் வண்ணச் சேவடியை மணிமுடியில் வைத்திருத்தலின், அதனைத் தன் அணிமணிப் புயத்தில் தரித்தான், என்று கூறப்படுகிறது ஆசிரியர் இந்நிகழ்ச்சியை இங்கு கூறியதன் காரணம் யாது? இதனை இங்கு கூறவில்லையெனில் மன்னனின் வடநாட்டுச் செலவில் தடை ஏதும் நேர்ந்து விடுமா? இது போன்ற வினுக்கள் உள்ளத்தில் எழும்போது இந்நிகழ்ச்சியைக் கூருது விடுவதனுல் மன்னன் செலவில் தடை ஏதும் நிகழப் போவதில்லை என்பது தெளிவாகும். ஆயினும் அடிகள் இங்கு இந்நிகழ்ச்சியை ஏன் புகுத்த வேண்டும் என்ற விை மீண்டும் மீண்டும் எழும்புகின்றதல்லவா? அடிகளுடைய கருத்து இன்னதென்பதை முற்றும் உணர்ந்து கொள்ளும் ஆற்றல் இல்லையாயினும் சிவனுக்கு முதன்மை வழங்க வேண்டும் என்ற காரணத்தால் இந்நிகழ்ச்சியைப் புகுத்தியிருக்கலாம் என்றே எண்ணத்தூண்டுகிறது. இவ்வாறு சிவனுக்கு முதன்மை வழங்கிய அடிகள், 'பிறவா யாக்கைப் பெரியோன்', 'இமையவன்', 'அருந்தெறல் கடவுள், 'கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன்', 'உலகு'

பொதியுருவத்து உயர்ந்தோன்' எனக் கூறிச் செல்கின்றாரே யன்றி 'சிவன்' என்னும் சொல்லால் குறிப்பிடவில்லை என்பதும் கவனிக்கத் தக்கது.

செவ்வேளின் சிறப்பு:- இனி பிற்காலத்தில் மிகுதியாக வழங்கிய புராணக் கதைகளும் காப்பிய காலத்தில் வழக்காற்றி லிருந்தன என்பதையும் அறியமுடிகின்றது. சிவனுக்கு முதன்மை வழங்கி வழிபட்டு வந்த மக்கள், முத்தமிழால் வைதாரையும் வாழவைப் போனாகிய முருகப் பெருமானையும் போற்றிப் பரவினர். செவ்வேள் எழுந்தருளியுள்ள திருத் தலங்களையும், திருவிளையாடல்களையும் பரிபாடல், கலித்தொகை திருமுருகாற்றுப்படை போன்ற நூல்கள் சிறப்பிப்பது போல, சிலம்பும், 'சீர்கெழு செந்திலும், செங்கோடும் வெண்குன்றும் ஏரகமும் நீங்கா இறைவன்' என்று ஏத்துகின்றது. 'பாரிரும் பௌவத்தினுள் புக்குச் சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வே லோன்' என்று அவன் திறம் வியந்துரைக்கின்றது. அணி முகங்கள் ஓராறும், ஈராறு கையும் இணையின்றித் தானுடையா னாகிய முருகனை 'ஆலமர் செல்வன் புதல்வன்', 'அறுமுக வொருவன்' 'கோழிச் சேவற் கொடியோன்' எனச் சிலம்பும், 'ஆலமர் செல்வன் மகன்' என மணிமேகலையும் அழைக்கின்றது. செந்தமிழால் செவ்வேளின் திறம் வியந்து போற்றிய மக்கள் கொற்றவையையும் வழிபட்டு வந்தனர். இதனைச் சிலம்பின் வாயிலாக அறியலாம்.

கொற்றவை வழிபாடு:- ஒல்காப் பெரும்புகழ்த் தொல் காப்பியத்தில் குறிக்கப்படும் கொற்றவை வழிபாடும் சிலப்பதி கார காலத்தில் இருந்திருக்கின்றது. யானைத் தோல்போர்த்துப் புலித்தோல் ஆடை அணிந்து காட்டெருமைக் கடாவின் மேல் அமர்ந்திருக்கும் கொற்றவையை,

"ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்து
கானத்து எருமைக் கருந்தலைமேல் நின்றாய்"

என்று கூறுகின்றார். இக்கொற்றவை வணக்கமே நாளடை வில் சக்தி வணக்கமாய் மாறியது. சக்தியை முழுமுதற் கடவு ளாகக் கொண்டதால் வாமம் (சாக்தேயம்) எனப் பெயர்

பெற்றுச் சைவ சமயப் பிரிவுகளுள் ஒன்ருகக் கருதப்பட்டது. அமரி, குமரி, கவுரி, சமரி, நீலி, சூலி, மாலின் தங்கை, பாய் கலேப்பாவை, பைந்தொடிப் பாவை, ஆய்கலேப் பாவை, என் றெல்லாம் கொற்றவை அழைக்கப்படுகின்ருள்.

சைவத்தின் ஒரு பிரிவாகிய காபாலிகமும் இக்காலத்தி லிருந்திருக்கின்றது என்பதைச் 'சுடலே நோன்பிகள் ஒடியா உள்ளமொடு மடைதீயுறுக்கும் வன்னி மன்றம்' என மணி மேகலே உணர்த்துகின்றது. 'சுடலேநோன்பிகள்' என்று குறிக்கப்படுபவர் காபாலிகராம்.

சைவ சமயமும் அதன் உட்பிரிவுகளும் பற்றிய குறிப்புக்கள் ஆங்காங்கே அமைந்து கிடப்பன போலவே பல்வேறு சமய அரசியல், வாணிபம் போன்றவை பற்றிய குறிப்புக்களும் அமைந்து கிடக்கின்றன. இக்காலத்தில் பல்வேறு சமயங்கள் நிலவிய போதும், அவற்றிடையே பூசல்கள் இருந்ததாகக் குறிப்புக்கள் காணப்படவில்லே. மக்கட் சமுதாயத்தில் மன ஒருமைப்பாடு உண்டுபண்ணுவதையே அடிப்படையாகக் கொண்டெழுந்த சமயம் நாளடைவில் பல்வேறு சமயங்களாக முகிழ்த்தது. பிணக்கும் பூசலும் மலிந்தன; ஆனுல் காப்பிய கால நிலே அவ்வாறிருந்ததாக அறியக் கூடவில்லே. பதிலாக, வாழ்வுக்கு மணமுட்டும் கலேகள் பெருகலாயின; மொழி வளர்ச்சி யுறத் தொடங்கிற்று.

முப்புரம் எரிசெய்த விரிசடைக் கடவுள் ஆடிய 'கொடு கொட்டி' பாண்டரங்கக் கூத்து ஆகிய கூத்துக்களே யெல்லாம் மாதவி ஆடினுள் என அடிகள் காட்டுவதும், அறுமுகவொரு வனின் அடியிணே தொழுது பரவியதாகக் காட்டும் குன்றக் குரவையும், வடவரையை மத்தாக்கி, வாசுகியை நாணுக்கிக் கடல் வயிறு கலக்கிய கடல் வண்ணனேப் பரவியதாகக் கூறப் படும் ஆய்ச்சியர் குரவையும் சமயம் வளர்த்த இசை நடனக் கலேகள் எனலாம். 'குறியவும் நெடியவும் குன்று கண்டன்ன நெடுநிலேக் கோட்டம் சமைத்துப், பல்வேறு சமயத்தைச் சேர்ந்த மக்களும் விழாக்கள் நடத்தி ழிபாடியற்றினர், என்பது கட்டிடக்கலே வளர்ச்சிக்குச் சான்ருக அமையும்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

உயிர் விளக்கம்

தேவார இசைமணி,
திரு. S. சங்கரநாராயணன் அவர்கள்,
ஸ்ரீகண்டேசுவர சுவாமி திருக்கோயில், தாமரங்கோட்டை,
பட்டுக்கோட்டைத் தாலுகா.

[மலர் 13. இதழ் 7-ன் தொடர்ச்சி]

இவ்வுலகை நல்வழியில் பயன் படுத்தினுல், இரவு பகலற்ற ஒளியைப் பெறலாம். ஒளிவிளக்கத்துக்கென்று, இறைவன் அளித்த அருட் பெருங்கொடையை மறக்கலாகாது. இறைவனது கொடை - அருட்பெருங் கொடை - நமது நலனை நாடியே நிற்கிறது. அதை மறந்தால் நாம் எப்படி நலம் பெறுவோம்? இறைவனது நினைப்பை ஊட்டுதற்கென்று அவனது படைப்புக்கள் காட்சியளித்த வண்ணமிருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் இறைவன் நினைப்பை ஊட்டுதல் அநுபவத்தில் உணரத்தக்கது. எவ்விதக் கைம்மாறுங் கருதாது, இவ்வளவு துணைபுரிந்துள்ள இறைவனை மறப்பதிலும் நன்றி கொல்லுவது வேறென்றுண்டோ?

இறைவனது இயற்கைப் படைப்புக்கள் பலபட நம்மைச் சூழ்ந்திருக்கின்றன. அவைகளுள் ஒன்றை—ஒன்றன் சினையை-ஒரு சிறுபுல்லை-புல்லின் நுனியை-நினைந்து நினைந்து, அதில்

(முன் பக்கத் தொடர்ச்சி)

சுருங்கக் கூறின், காப்பிய காலம் பூசலின்றிச் சமயம் வளர்ந்த காலம்; சிவனுக்கு முதலிடம் அளித்து வழிபட்டு வந்த மக்கள் வாழ்ந்த காலம்; சமயத்தால் கலைகள் பலவும் வளர்ச்சியுற்ற காலம்; கன்னித் தமிழ் மணம் பரப்பும் காப்பியப் புலவர்கள் வாழ்ந்த காலமாம்.

———

ஒன்றினும், அஃது ஒளியை விளங்கச்செய்யும், இறைவன் படைப்பு ஒவ்வொன்றும் நமக்குத் துணைபுரியக் காத்துக் கொண்டிருக்கிறது. அதன் மீது கருத்துச் செலுத்த வேண்டுவது நமது கடமை. இயற்கைக்கூறு ஒவ்வொன்றும் தன்னைப் பற்றுவோர்க்கு ஒளியை விளங்கச் செய்யும். இயற்கை அன்னை எவ்விதக் கைம்மாறுங் கருதாது உயிர்கட்கு நலஞ்செய்கிறாள். இங்கே அப்பர் பெருமான் அருளிய திருப்பாட்டொன்று நினைவுக்கு வருகிறது.

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்நிற்குமே.

இப்பாட்டின் கருத்தை நோக்குங்கள். 'விறகில் தீயும், பாலில் நெய்யும், மணியில் ஒளியும், மறைந்திருப்பது போல, இறைவன் இயற்கையில் மறைந்திருக்கிறான். உறவு என்னும் அன்புக் கோலிட்டு, உணர்வு என்னும் ஞானக் கயிறு பூட்டிக் கடைந்தால், மறைந்துள்ள இறைவன் தோன்றுவன்' என்பது பாட்டின் சாரம். உறவு கோல் நட்டு உணர்வு கயிற்றினால் கடைவதே அகவழிபாடு அல்லது தியானயோகம் என்பது. தியான யோகத்துக்குத் தூயவுள்ளம் தேவை. தூய உள்ளத்துக்கு நல்லுடல் தேவை. நல்லுடல் இயற்கையோடியைந்த வாழ்வில்–பொருந்திய உணவில் ஒழுக்கம் ஓம்பலில்–இன்னபிற வற்றில் அமையும். – உடல் நலம் பெறின் உள்ளந்தூய தாகும். தூய உள்ளத்தால் இயற்கைக் கூறுகளையாதல், அவைகளின் நுட்பங்கள் அடங்கிய ஓவிய உருவங்களையாதல் தியானஞ் செய்யச் செய்யப் பலதிற ஒளிகள் படிப்படியே தோன்றித் தோன்றி, மறைந்து மறைந்து இறுதியில் வாடாத ஒளி விளங்கப்பெறும். ஒளி, நெஞ்சமலரில் கோயில் கொள்ளும்; எங்கும் கோயில் கொள்வதாகும்.

கோயில் வெறுங் கட்டட மன்று. அது தத்துவ அமைப்பு தத்துவ நுட்ப முணர்ந்து கோயில் வழிபாடு நிகழ்த்துவது அறிவுடைமை. தத்துவ நுட்பங்களைக் கலைகளால் உணரலாம்.

அமைப்பின் நுட்பந் தெரியாது அதைச் சுற்றிச் சுற்றிக் கும்பிட்டு வந்தால், அது கல்லாக – மண்ணாக – வேடிக்கை யாகவே – தோன்றும்.

குறிகளும் அடையாளமுங் கோயிலும்
நெறிகளும் அவர்நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியிலீர் மனம் என்கொல் புகாததே.

என்று அப்பர்பெருமான் அருளிய கோயிற் பாட்டைப் பார்க்க.

குறி – அடையாளம் – கோயில் – நெறி – முதலியன நுட் பங்கள் வாய்ந்தன. அவைகளின் உள்ளுறை தெரிந்து வழிபாடு நிகழ்த்தினால், அவைகளால் விளையத்தக்க பயன் விளையும். கோயில் அமைப்பின் உள்ளுறை உணராது, உதட்டளவில் ஆயிரக் கணக்கில் மறைகளை முழக்குவதால் என்ன பயன் விளையும்? இவ்வாறு வெறும் முழக்கஞ் செய்வோரைப் 'பொறியிலீர்' என்று பொதுமைப் பொருள் விளிக்கிறது. வாயால் வேதங்களை ஓயாமல் ஓதுவதால் மட்டும் பயன் விளையாதென் பதும், அவ்வேதத்திலுள்ள தத்துவங்கள் கோயிலாக அமைந் துள்ள நுட்பம் மனம் புகுதல் வேண்டுமென்பதும், அப்பொழுதே குறிகளும், அடையாளமும், கோயிலும், நெறிகளும், 'அவர் நின்றதோர் நேர்மையும்' இனிது விளக்குமென்பதும் அப்பர் திருவுள்ளக் கருத்து.

நாம் எத்தனையோ பிறவிகள் எடுத்தோம்; இப்பொழுது இப்பிறவி எடுத்துள்ளோம். இது பெறுதற்கரியது. இப்பிறவி யின் பெருமையைப் பேசாத சான்றோரில்லை. எல்லாச் சமயத்த வரும் மனிதப் பிறவி சிறந்ததென்று ஒருமுகமாகப் பேசி யுள்ளனர். இத்தகைய அரிய பிறவி நமக்கு வாய்த்துள்ளது. இதை நல்வழியில் பயன்படுத்த வேண்டும். இதைப் பாழுக்குப் பயன் படுத்தலாகாது.

தோழர்களே! யான்பிறந்தேன்; வளர்ந்தேன்; வாழ்வில் யான்பெற்ற அனுபவமென்னை? யான் உலகிற்குச் சொல்ல விரைவது என்ன? "வாழ்விற்கு வேண்டற் பாலது வழிபாடு;

தொண்டு; பணி; பயன் கருதாப்பணி; அதுவே வீடுபேறு. வேறு வீடு வேண்டுவதில்லை. பிறப்புண்டேல் மீண்டும் மீண்டும் யான்பிறக்க விழைகிறேன்; பிறவி தோறும் பயன்கருதாப்பணி செய்யும் பேற்றை யான்பெற ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன். 'என்கடன் பணி செய்து கிடப்பதே'; இஃது எனது அனுபவத்திற்கண்ட உண்மை. இதை உலகுக்குச் சொல்ல விரைகிறேன்.

எண்ணுயிரத்தாண்டு யோகமிருப்பினும்
கண்ணாரமுதினைக் கண்டறிவாரில்லை
உண்ணுடியுள்ளே ஒளிபெற நோக்கிடில்
கண்ணுடிபோலே கலந்தி ருந்தானே.

வான்முகில் வழாஅது பெய்க!
மலிவளம் சுரக்க! மன்னன்
கோன்முறை அரசு செய்க!
குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க!
நற்றவம் வேள்வி மல்க!
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம்.

திருவுந்தியார்-விளக்கவுரை

பண்டித வித்துவான், சைவப்புலவர், சித்தாந்த நன்மணி,
திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

[மலர் 13. இதழ் 7-ன் தொடர்ச்சி]

தாக்கியே தாக்காது நின்றதோர் தற்பரன்
நோக்கில் குழையுமென் றுந்தீபற
நோக்காமல் நோக்கஎன் றுந்தீபற. 11

(வி-ரை) தாரணியில் இந்திர சாலம் புரிவோன் யாவரையும் தான் மயக்கும் தந்திரத்தில் சாராது சார்வது போல, எல்லாப் பொருள்களிலும் கலப்பினுல் ஒன்ருகக் கலந்தும் பொருட்டன்மையால் கலவாது தனித்தும் நிற்பது பரம்பொருள் ஆகும். அதனை நமது முனைப்பினுல் காண இயலாது. அவனருளே கண்ணுகக் கொண்டு, "காண்பார் யார் கண்ணுதலார் காட்டாக்காலே" எனநினைந்து தொழுதால் அப்பொருளைக் கண்டு மகிழலாம் என்றவாறு.

இக்கருத்தினையே

"ஆக்கப் படாத பொருளா யனைத்தினிலும்
தாக்கித்தான் ஒன்ருேடும் தாக்காதே—நீக்கியுடன்
நிற்கும் பொருளுடனே நிற்கும் பொருளுடனுய்
நிற்கை நிராதார மாம்"

"காண்கின்ற தோர்பொருளைக் காண்கின்ற யோகிகளே
காண்கின்ருர் காட்சியறக் கண்ணுதலை—காண்கின்ருர்
காண்பானும் காணப் படும்பொருளும் அன்றியே
காண்கையினுற் கண்டனரே காண்"

என்னும் திருக்களிற்றுப் படியார்ப் பாடல்கள் விளக்கி நிற்கும்.

மூலை யிருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியர்என் றுந்தீபற
தவத்தில் தலைவர்என் றுந்தீபற. 12

(வி - ரை) உயிர்கள் கருவி கரணங்களின்றி மலத்தில் தொடக்குண்டு அதுவதுவாக நிற்கும் நிலைக்குக் கேவலம் என்று பெயர். அவ்வுயிர்கள் செய்த கன்மத்தைப் புசித்துத் தொலைக்க இறைவன் கொடுத்த உடல், கரணங்களுடன் அவ்வுயிர்கள் வாழும் நிலைக்குச் சகலம் என்று பெயர். "இவ்விருநிலையிலும் இருக்கும் உயிர்களைத்தான் மூலையிருந்தார்" எனக் குறிக் கின்றார் ஆசிரியர். இத்தகைய நிலையிலிருக்கும் உயிர்கள் அறியாமை நீங்கிச் சிவானுபவத்தை நுகர்தற்கு ஞானாசிரியரின் திருவருளே இன்றியமையாததாகும். உயிர்கள் அறியாமை நீங்கிச் சிவானுபவத்தை நுகரும் நிலைக்குச் சுத்தம் என்று பெயர். இந்நிலைக்கு ஆளாக்கிய ஞானாசிரியரே "முற்றத்தே விட்டவர்" எனப்படுவார். இவரே மிகவும் பெரியவர் ஆவர். இவரைத் தவத்தினாலேயே பெறுதற்கியலும் என்றவாறு.

'தவத்தில்' என்னும் ஐந்தனுருபை, ஏதுப் பொருளில்வரும் மூன்றனுரு பாகத் திரித்து, வரும் என ஒருசொல் வருவித்து முடிக்க. ஈண்டுத்'தவம்' என்பது சரியை முதலிய நெறிக்கண் நிற்றலைக் குறிக்கும். "தம் முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த" என்னும் சிவஞான போதப் பகுதிக்கு விரிக்கப்படும் உரைகொண்டு இவ்வுண்மை அறியத்தகும். மாணிக்கவாசகப் பெருமானும் திருப்பெருந்துறையில் தம் குருமூர்த்தியைக் காண் பதற்கு "நானேயோ தவஞ்செய்தேன்!" எனக் கூறு மாற்றானும், குமரகுருபரரும் "பன்னாள் அலமருதல் கண்ணுற்றருளிக் குருபரன் என்றோர் திருப்பேர் கொண்டு" எனக் கூறுமாற்றானும் ஞானாசிரிய ரைத் தவத்தினாலன்றிக் காண்டற் கியலாது என்னும் உண்மை நன்கு விளங்கும்.

ஒட்டற்று நின்ற உணர்வு பதிமுட்டித்
தேட்டற் றிடம்சிவம் உந்தீபற
தேடும் இடமதென் றுந்தீபற. 13

(வி - ரை) 'போக்கும் வரவும் புணர்வும் இலாப்புண்ணி யனே' - என்றபடி ஒருவித அசைவும் அற்று, என்றும் ஒரு தன்மைத்தாய் விளங்குவது சிவபரம்பொருள் ஆகும். 'அவனரு ளாலே அவன்தாள் வணங்கி' என்றபடித் திருவருளே கண் ணுகக் கொண்டு, அப்பரம்பொருளைத் தலைப்பட்டு வழிபட வேண்டும். இங்ஙனம் கவற்சியின்றி வழிபடத்தக்க அப்பரம் பொருள், புறச்சூழலில் இங்குள்ளது, அங்குள்ளது எனத் தேடு தற்குரியதன்று என்றவாறு.

ஓடுதல் அற்று என்பது 'ஓட்டற்று' என்றும், தேடுதல் அற்று என்பது 'தேட்டற்று' என்றும் வந்தது. ஓடுதல் - அசை தல். தேடுதல் - கவலுதல் (இங்கோ அங்கோ எனக் கவலுதல்).

"கவராதே தொழும் அடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே"

"தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணுத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்"

என நாவரசரும்,

"முகத்தில் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்"

எனத்திருமூலரும், 'உணர்வில் நேர்வரும் சிவபோகம்' - எனச் சேக்கிழாரும் 'தேட்டற்ற இடம் சிவம்'-என்பதை விளக்குதல் காணலாம். இக்கருத்தினையே,

"ஓட்டற்று நின்ற உணர்வு பதிமுட்டித்
தேட்டற்று நின்றஇடம் சிவமாம்—நாட்டுற்று
நாடும் பொருளனைத்தும் நாலு விதமாகத்
தேடும்இடம் அன்று சிவம்."

என வரும்திருக்களிற்றுப்படியாரும் நன்கு விளக்கும்.

(வளரும்)

தமிழ் வளர்த்த திருமடங்கள்

வித்துவான், திரு. பொன். முருகையன் அவர்கள்
தலைமைத் தமிழாசிரியர்,
ஸ்ரீகயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள்
உயர்நிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

நம் தமிழ் நாட்டில் தொன்று தொட்டு எத்துணையோ மடங்கள் தோன்றித் தமிழையும், சைவத்தையும் வளர்த்து வந்திருக்கின்றன. உடலுக்கு இன்றியமையாத அன்னதானம் செய்தலோடன்றி, உள்ளத்திற்கும் மறுபிறப்பிற்கும் ஏதுவாய் மொழி, சமயக் கோட்பாடு ஆகியவற்றை வளர்ப்பதில் மடங்கள் என்றும் பின் வாங்கியதில்லை. நம் தமிழ் நாட்டில் பல்லவர் ஆட்சிக்காலத்திலும், சோழ பாண்டிய சேரர்களுடைய ஆட்சிக் காலத்திலும் எத்துணையோ மடங்கள் விளங்கியிருந்தன. சமய அறிவை ஊட்டும் இடம் மடம். அதனை மக்களுக்குப் போதிக்கும் தலைவர்கள் (துறவிகள்) அவ்விடத்தில் இருந்து, தமிழுக்கும் சைவமதத்திற்கும் பெருந்தொண்டு புரிந்தனர்.

பல்லவர் ஆட்சிக் காலத்தில் பாசுபதர், சமணர், காளாமுகர், பைரவர், வைணவர் முதலிய மதத்தினருக்கு மடங்கள் இருந்தன. அரசர்களும் அவற்றிற்கு நிலங்களை மானியமாக அளித்து வளர்த்தனர். மடங்களுக்கு அரசனால் கொடுக்கப்பட்ட ஊர்கள் "மடப்புறம்" என்று வழங்கப்பட்டன. அத்தகைய மடங்களின் வரலாற்றை நோக்குதல் நம்மவர் கடமை.

சைவ மடங்கள்: சைவத்திற்கும் தமிழுக்கும் பெருந்தொண்டு புரிந்த மடங்கள் பல. அவற்றுள் முதன்மையானவை தருமபுரம், திருவாவடுதுறை, மதுரை, குன்றக்குடி, திருப்பனந்தாள் முதலிய ஊர்களில் உள்ள மடங்கள்.

இவற்றுள் மதுரையில் உள்ள திருமடம் சைவ சமயகுரவர் களுள் முதன்மை பெற்ற திருஞானசம்பந்தரால் நிறுவப் பட்டது.

தமிழ் நாட்டில் ஏழாம் நூற்ருண்டில் சைவ மதத்திற்கு ஒரு மாற்றம் ஏற்பட்டது. மதுரையில் ஆண்ட, நின்ற சீர் நெடுமாறனுகிய கூன்பாண்டியனும் மற்ருேரும் சைவமதம் விட்டு சமணநெறி சார்ந்தனர். சைவத்திற்கு உறைவிடமான மதுரை நகரம் சமண சமயப் பாழிகள் நிறைந்த இடமாக மாறியது.

இந்நிலையில் ஆண்டு போந்து அனல் வாதம், புனல் வாதம் முதலிய வாதுகளில் வென்று, சைவத்தை நிலைநாட்டியவர் திருஞான சம்பந்தர். எனவே ஏழாம் நூற்ருண்டு முதல் இன்று வரை விளங்கிவருவது அவ்வாதீனம்.

வேதநெறி தழைத்தோங்கவும் மிகு சைவத்துறை விளங்க வும் வழிகோலியது அவ்வாதீனம்.

தருமபுர ஆதீனம்

14-ஆம் நூற்ருண்டின் தொடக்கத்தே தோன்றித் தமிழை யும் சைவத்தையும் வளர்த்த மடங்களுள் இது ஒன்று. இதனை நிறுவியவர் குருஞானசம்பந்தர் ஆவர். இவர் பாண்டிநாட்டு சீவில்லிபுத்தூரில் பிறந்த வேளாளர். இந்த நூற்ருண்டில் தோன்றிய மற்ருெரு ஆதீனம் திருவாவடுதுறை யாதீனம். இதனை நிறுவியவர் குருநமச்சிவாய முனிவர்.

ஆசாரிய பரம்பரை

13-ம் நூற்ருண்டில் திருவெண்ணெநல்லூரில் வாழ்ந்த ஸ்ரீமெய்கண்ட தேவருக்கு 49-மாணவர்கள் இருந்தனர். அவருள் முதல்வர் அருணந்தி சிவாசாரியார்.

இவருடைய மாணுக்கர் உமாபதி சிவாசாரியார் அவர் பரம் பரை வருமாறு :—

ஸ்ரீ மெய்கண்ட தேவர்
|
அருணந்தி சிவாசாரியார்
|
உமாபதி சிவாசாரியார்
|
மச்சுச் செட்டியார்
|
கங்கை மெய்கண்டார்
|
சிற்றம்பல நாடிகள்
|
பழுதை கட்டி ஞானப்பிரகாசர்
|
கமலை-ஞானப் பிரகாசர்
|
ஸ்ரீ குருஞான சம்பந்தர்

ஆசிரியர் மெய்கண்டார் இயற்றிய நூல் சிவஞானபோதம். அருணந்தி சிவாச்சாரியார், சிவஞான சித்தியார் இருபா இருபஃது என்ற நூல்களை இயற்றினர்.

உமாபதி சிவாச்சாரியார் சிவப்பிரகாசம், கொடிக்கவி, உண்மை நெறி விளக்கம், நெஞ்சு விடுதூது, வினவெண்பா திருவருட்பயன், சங்கற்ப நிராகரணம், போற்றிப் பஃறொடை என்ற எட்டுச் சித்தாந்த நூல்களை இயற்றினர். கோயில் புராணம், சேக்கிழார் புராணம், திருத்தொண்டர் புராண சாரம், திருப்பதிகக் கோவை முதலியனவும் இவரியற்றியனவே.

இவரது மாணுக்கராகிய சீர்காழி மச்சுச் செட்டியார் என்பவர் வேளாள குலத்தைச் சேர்ந்தவர். இவர் ஞான பூசைத் திருவிருத்தம் என்ற நூலை எழுதினர். இவர் உலக ஆசையை வெறுத்து, இறைவனையே நோக்கித் தம் வீட்டு மாடி (மச்சு) யிலேயே இருந்ததனல் இப்பெயர் உண்டாயிற்று.

இவருடைய முதன் மாணுக்கர் கங்கை மெய்கண்டார். இவருடைய மாணுக்கர் சீகாழிச் சிற்றம்பல நாடிகள் இவர் தமது மாணுக்கர் அறுபத்து நால்வருடன் சித்தக் காட்டில் சமாதி

யடைந்தார். இவர் எழுதிய நூல்கள் துகளறு போதம், சிவப் பிரகாசக் கருத்துரைச் சூத்திரம், திருச்செந்தூர் அகவல், முதலியன. இவருடைய மாணுக்கராகிய பழுதைகட்டி ஞானப் பிரகாசரின் முதன் மாணுக்கர் திருவாரூர் கமலை ஞானப்பிரகாசர். இவர் சிவானந்த போதம், பிரசாதக்கட்டளை, அத்துவாக்கட்டளை, சிவபூசையகவல் முதலிய நூல்களை இயற்றினுர். இவருடைய முதன் மாணுக்கரே தருமபுர ஆதின குருமுதல்வராகிய ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்த தேசிகர் அவர்கள்.

ஆதீன குருமுதல்வர், சிவபோக சாரம், சொக்கநாத வெண்பா, பரமானந்த விளக்கம், முத்தி நிச்சயம், திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல் முதலிய நூல்களை இயற்றினுர்.

இவ்வாதீனத்தில் இரண்டாவது பட்டத்தில் இருந்தவர் ஆனந்தபரவசர். குருவுக்கு முன்னரே சமாதி நிலையடைந்தவர்.

நாலாவது பட்டத்திலிருந்த ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர், ஸ்ரீ குமரகுருபரருக்கு உபதேசம் செய்தவர்.

ஆருவது பட்டத்தில் இருந்த திருஞான சம்பந்த தேசிகரின் மாணுக்கர் வெள்ளியம்பலத் தம்பிரான். இவர் துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகளுக்கு ஆசிரியராவர்.

எட்டாவது பட்டத்தில் இருந்த திருச்சிற்றம்பல தேசிகர் தீபம் என்னும் நூலை இயற்றினுர். சுவர்க்கபுரம் மடத்தை நிறுவினுர். தருமபுர ஆதீனத் தம்பிரானுகிய அழகிய சிற்றம்பல தேசிகரால், திரிபதார்த்த தீபம் என்னும் நூல் இயற்றப்பட்டது.

இவ்வாதீனப் புலவராகிய வடுகநாத தேசிகர் என்பவர், திருமுல்லை வாயிற் புராணத்தை இயற்றினுர்.

இவ்வாதீனத்துப் பிற நூல்கள்:- ஞானப்பிரகாசர் தசகாரியம், போதானந்த சித்தியார், திரிபதார்த்த ரூபாதி தசகாரியம், பதிபசுபாசப்பனுவல், சிவானந்த மாலை, சம்பிரதாய தீபம், ஞானுவரண விளக்கக் குறள், சித்தாந்தநிச்சயம், சதமணிக் கோவை, பரமத சங்கற்ப பரமோபதேசம், நிராகரணம், பரமத திமிரபானு, சிவானுபோக சாரம்.

இப்பொழுது பட்டத்திலிருப்பவர்கள் 25 - வது பட்டம் ஸ்ரீகயிலை சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள். இவர்கள் அருளாட்சியில் 27தேவஸ்தானங்கள் உள்ளன. நூல்கள் வெளியீடு, சமயப் பிரசாரம், பல்கலைக் கல்லூரி, சித்தாந்த மகா நாடு முதலியன நடைபெறுகின்றன.

திருவாவடுதுறை மடம் :

மேற்கண்ட ஞான பரம்பரையில் வந்த உமாபதி சிவாச்சாரியாரின் முதன் மாணுக்கர் அருணமச்சிவாய தேசிகர். அவர் திருவாவடுதுறைச் சித்தர் சிவப்பிரகாசர்க்கு உபதேசம் செய்தார். அவர் முவலூர் வேளாளர் குலதிலகமாகிய நமச்சிவாய மூர்த்திகளுக்கு உபதேசம் செய்தார்.

உமாபதி சிவம்
|
அருணமச்சிவாயதேசிகர்
|
சித்தர் சிவப்பிரகாசர்
|
குருநமச்சிவாய தேசிகர்.

குருநமச்சிவாய தேசிகரே திருவாவடுதுறை மடத்தை நிலைநாட்டியவர். நமச்சிவாய தேசிகருக்குப்பிறகு மறைஞான தேசிகர் ஞானம் பெற்ருர்.

பின்பு பட்டத்திலிருந்த தெக்கணு மூர்த்தி தேசிகர், தசகாரியம், உபதேசப் பஃறெடை என்னும் நூல்களை இயற்றினுர்.

15-ம் நூற்ருண்டில் பெரிய பட்டத்திலிருந்த அம்பலவாண தேசிகர் அவர்கள், தசகாரியம், சன்மார்க்க சித்தியார், சிவாக்கிரமத் தெளிவு, சித்தாந்தப் பஃறெடை, சித்தாந்த சிகாமணி, உபாய நிட்டைவெண்பா, உபதேச வெண்பா, நிட்டை விளக்கம், அதிசயமாலை, நமச்சிவாயமாலை என்னும் 10 நூல்களை அருளினுர்.

ஈசான தேசிகர் தசகாரியமும், பின் வேலப்பதேசிகர் பஞ்சாக்கரப் பஃறெடையும் இயற்றினுர்கள்.

சிவஞான முனிவர் திருவாவடுதுறை ஆதீனத் தம்பிரான்களுள் ஒருவராவர்.

பெரிய பட்டம் வேலப்ப தேசிகர் திருப்பறியலூர்ப் புராணம் பாடினர். சின்னப்பட்டம் வேலப்ப தேசிகர் பஞ்சாக்கரப் பஃறொடை, ஞான பூசாவிதி, மரபட்டவணை என்னும் நூல்களை அருளினர்.

திருவாவடுதுறையில் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன் சுப்பிரமணிய தேசிகர் ஆட்சிக் காலத்தில் புலிக்குட்டி இராமலிங்கத் தம்பிரான் என்றொருவர் இருந்தார். இவர் சிலேடை, ஆசுகவி பாடுவதில் வல்லவர். இவர் கட்டளைத் தம்பிரானாக பல தேவத்தானங்களிலும் இருந்தார். திருவாவடுதுறையிலே தங்கவேண்டும் என்ற விருப்பம் இவருக்கு ஏற்பட்டது. தனது விருப்பத்தைக் குருமூர்த்தியிடம் தெரிவித்துத் தன்னை வேறிடத்திற்கு அனுப்பாமல் ஆதீனத் தலைநகரிலேயே இருக்க உத்தரவிடுமாறு கேட்டார்.

இவரது வேண்டு கோட்கு இசையாது, வேறு எந்த மடத்திற்காவது செல்லட்டும் என்று அவ்வாதீனத் தலைவர் உத்தரவிட்டார். புலிக்குட்டி இராமலிங்கத் தம்பிரான் அவர்கள் வேறு எங்கும் செல்ல விரும்பவில்லை என்பதை சிலேடை நயம்பட ஒருபாடலில் தெரிவித்தார். அப்பாடல் வருமாறு.

"கோமுக்தி அடைந்தேன்முன் தருமபுரம்
எவ்வாறு குறுகுவேன்பின்
தோமுற்ற சுவர்க்கபுரம் இதுவுமொரு
பொருளாமோ துறவியானேற்கு
ஏமுற்ற குன்றக்குடி வாழ்க்கையும்
என்நெஞ்சம் இசையுமோ?சொல்
காமுற்ற கூடலுந்தான் ஆமோ?
சுப்பிரமணிய கருணைக்குன்றே.

(கோமுக்தி—மோட்சநிலை, திருவாவடுதுறை.)
(தருமபுரம்—தருமராசதானி, தருமையாதீனம்.)
(சுவர்க்கபுரம்—சுவர்க்கம், சுவர்க்கபுரம் மடம்.)

(குன்றக்குடி—குன்றத்தில் வாழும் வாழ்க்கை ஆதீனம்.)
(கூடல்—திருமண வாழ்க்கை, மதுரை யாதீனம்.)

மகாவித்துவான் திரு. மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்களைத் தமிழ் உலகுக்கு ஈந்த பெருமை இவ்வாதீனத்தைச் சாரும்.

திருப்பனந்தாள் மடம்:

திருநெல்வேலியை யடுத்த ஸ்ரீவைகுண்டத்தில் அவதரித்து, ஐந்தாண்டுகள் வரை ஊமையாய் இருந்து, முருகனருளால் ஊமை நீங்கப்பெற்று, தருமபுர ஆதீனம் 4-வது பட்டம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர் பால் ஞானுேபதேசம் பெற்று, காசியாத்திரை சென்று, காசியில் நவாபிடம் இந்துஸ்தானியில் பேசி, மடம் நிறுவி, சைவநெறியை வளர்த்து, காசியிலேயே திருவடி நிழல் சார்ந்த குமரகுருபர அடிகளின் வழிவந்த தில்லைநாயக சுவாமிகளால் இம்மடம் நிறுவப்பட்டது.

கந்தர் கலிவெண்பா, சகலகலாவல்லிமாலை, நீதிநெறி விளக்கம், காசிக்கலம்பகம், மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ், சிதம்பரச் செய்யுட் கோவை, திருவாரூர் நான்மணிமாலை, முத்துக்குமாரசாமிப் பிள்ளைத் தமிழ், சிவகாமியம்மை இரட்டை மணிமாலை, பண்டார மும்மணிக்கோவை, சிதம்பர மும்மணிக் கோவை முதலிய நூல்கள் இவ்வாதீன குருமுதல்வராகிய குமர குருபர அடிகளால் அருளப் பெற்றன.

இம்மடத்தில் 14-வது பட்டத்திலிருந்த ஸ்ரீலஸ்ரீ இராம லிங்கத் தம்பிரான் சுவாமிகள் (1853—1880) அவர்கள் ஆட்சிக் காலத்தில் கருங்கல் திருப்பணி நடைபெற்றது.

இப்பொழுது 20-வது பட்டத்தில் இருப்பவர்கள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள். காசி முதல் கன்யாகுமரி வரை இவர்கள் அறக்கட்டளைகள் ஏற்படுத்தி யுள்ளார்கள்.

திருவண்ணுமலை ஆதீனம்: இலங்கையினின்றும் தமிழ்நாடு வந்து சேர்ந்த ஞானப்பிரகாசர் சிவஞானசித்தி சுபக்கத்திற்கு

ஓர் உரை எழுதினர். இவர் ஒரு புதையல் கண்டு எடுத்து, திருவண்ணுமலையில் மடமும் குளமும் கண்டார்.

காஞ்சிபுரம் மடம்: 1511-ல் காஞ்சிபுரத்தில் சைவ முதலிமார்களுக்கு என்று ஒரு மடம் நிறுவப்பட்டது. இதன் தலைவர் ஞானப்பிரகாசர்.

மேற்கண்ட மடங்கள் அல்லாமல் எத்துணையோ மடங்கள் ஆங்காங்கே அன்னதானமும், கல்வி தானமும், சமய ஞானமும் செய்து வருகின்றன. மடங்கள் சிறந்தால் தான் நாடு சிறக்கும். எனவே இப்படிப்பட்ட மடாலயங்கள் சிறந்து வாழ ஆண்டவனும் அரசியலும் துணை செய்யப் பிரார்த்திக்கிறேன்.

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

தெய்வீகன்

திரு. சி. முனிரத்தினம் அவர்கள்,
(புலவர் இறுதி நிலை) சி. பா. சு. தமிழ்க் கல்லூரி,
மயிலம்.

மலர் 13. இதழ் 7-ன் தொடர்ச்சி

மணங்களும் மக்களும்

இவ்வாறு முறைதவரு ஆட்சியும், முகங்கோணுக் காட்சியும் பெற்று செங்கோலோச்சி வாழ்ந்திருக்கு மெல்லையில் வடநாட்டின் வளப்பங்காணப் புறப்பட்டார். வடநாட்டு சப்த புரிகளையும் (ஏழு நாடுகள்) சுற்றுலா வந்தார். ஒவ்வொரு நாட்டு மன்னரும் தெய்வீகன் வருகையை நோக்கி உளமார வரவேற்று விருந்தளித்து அடிபணிந்தனர். இம்மன்னர்கள் யாவரும் தெய்வீகனின் ஆற்றல்களை நன்கு உணர்ந்தவர்களாதலின் உறவுமுறை கொள்ளத் துணிந்தனர். எண்ணிய நல்லெண்ணத்தை ஈடேற்றும் வாயிலாகத் தத்தம் புதல்வியரை அம்மன்னற்கு அளிப்பதாகக் கூறி முன் வந்தனர். திருமகனும் ஏற்றுக்கொள்ள இசைந்தமையான் எழுமன்னரும் பெருமகிழ்வுற்றனர்.

அவ்வாறே, காசிராசன் மகள் "பிரபை" என்பவளையும், காஞ்சி அரசன் கன்னி "கமலாவதி"யினையும், அயோத்தி மன்னனான "சிசுருமன்" செல்வி "கனகை"யினையும், அவந்தி அரசன் "விசாலக்கண்ணனின்" வனிதை 'கலாவதி'யினையும், துவாரகை அரசு "சந்திரவர்மன்" புதல்வி "பலசந்தமாலை"யினையும், வடமதுரையான் மடந்தை "கமலக்கண்ணி"யையும், செல்வபுரிக்கோ "மாயமாசேனனின்" சேயிழை மதிமிகு "நயனி" என்பவளையும் ஆக ஏழு மகளிரை ஆரிடமுறையானே (பொருள்கோள்) தெய்வீக மன்னன் மணந்துகொண்டார். கடிமணமேற்ற கன்னியரெழுவரும் கழிபேருவகை எய்தினர். அன்று அருச்சுனன் தீர்த்தயாத்திரை செய்யுங்கால் அரிவையர் பலரை மணந்து கொண்ட தன்மை இவற்கும் ஒக்குமன்றோ! திருநலங்

குன்ருத் தெய்விக மன்னன் பொன்னெடும் பொருளொடும் பெண்ணெடும் புகழொடும் தன்னுடு வந்தடைந்தார். முன் பெற்ற மூவேந்தர் மகளிரும், பின்பெற்ற வதுவையரெழுவரும் பிணைந்த அன்பினராய் பிணக்கின்றி வாழ்ந்தனர். இஃது இவ் வாறு நிற்க இவண் ஆராய்ச்சிப் பகுதிக்குச் செல்வாம்.

"சிங்கள மெனுந்தேய முழுதாளும் மன்னன்
சிறந்த பேர்பாரி சாளன் செய்தவப் பயனுய்த்தோன்றிய
அங்கவை சங்கவை யெனும்................."

என்று தொடங்கும் சதகச் செய்யுளான் பாரி வேந்தன் மகளி ரான அங்கவை, சங்கவையைத் தெய்விகன் திருமணம் செய்து கொண்டதாகக் கூறுகிறது. மேலும் இத்திருமணத்திற்குத் தென்பெண்ணையின் வடகரையில் மணப்பந்தரமைத்து, அவ் வையாரின் வேண்டுகோட்படி ஆனைமுகப்பெருமான் திருமண ஓலை எழுதி விடுவித்ததாகவும் தெரிகிறது. மற்றும் இத் திருமணத்திற்கு வந்த மக்களின் மிகுதிகண்டு மகிழ்ந்த அவ் வையார் அவர்களுக்கு வேண்டிய உணவு கருதி,

"முத்தெறியும் பெண்ணை முதுநீ ரதுதவிர்ந்து
தத்திய நெய்பா றளைப்பெய்து—குத்திச்
செருமலைத் தெய்விகன் திருக்கோ வலூர்க்கு
வருமளவும் கொண்டோடி வா."

என்ற வெண்பாவைப் பாடி பெண்ணையில் பொங்கு பால், நெய், தயிர் முதலான பொருள்கள் வந்ததாகவும், அதனல் இத்திரு மணத்தை அவ்வையாரே சிறப்பிக்கச் செய்தார் என்பதைப் பிறிதோர் சதகத்தான் தெரிய வருகிறது. இந்நிகழ்ச்சிக்குச் சான்ருக இன்றும் பெண்ணையின் வடகரையில் "மணம் பூண்டி" என்ற ஒரு சிற்றூர் உளது. இவ்வூரே தெய்விகன் திருமணத் திற்கு மணப் பந்தராக அமைந்த இடமென்று ஆங்குளோர் செப்புகின்றனர்.

இனி, இப்பாரி மகளிரின் திருமணத்தைப் பற்றிப் புற நானூறு போன்ற சங்க இலக்கியங்கள் கூறுவது வேறும். அஃதாவது வள்ளல் பாரி வேந்தன் உயிர் துறக்கும் ஞான்று, தனது அருமை நண்பரும், அவைப் புலவருமான கபிலர்

பெருமானை நோக்கி, "புலவீர்! எம் கண்களனைய மகளிரிரு வரையும் விடுத்துச் செல்லுகிறேன். அவர்களுக்கு நல்வாழ்வைச் செம்மைப் படுத்திய பின் எம்மை அடைவீர்!" என்று கூறி மறைந்தான். பாரியின் இறுதி வாக்கைக் காப்பாற்ற எண்ணிய கபிலர், இருங்கோவேள், விச்சிக்கோ போன்ற மன்னர்களை அணுகியும் பயன் பெருது வருந்தினுர். அதுகாலை, கோவலூர் மன்னன் நினைவு வரவே நன்னம்பிக்கை கொண்டு மலாடு நாட்டைச் சேர்ந்தார். அது போழ்து ஆட்சியிலிருந்தவன் மலையமான் திருமுடிக்காரி என்ற மன்னனுவான். கன்னித்தமிழ் காக்கும் கபிலர் பெருமானின் வரவை அறிந்த காரி மன்னன் வருக! வருக! வென வரவேற்று அம்பொன் இருக்கையில் அமரச் செய்தனன். புலவர் பெருமான் திருமுனைப்பாடியின் வளங் குறித்தும் மன்னர் புகழ் குறித்தும் பாமாலை பாடி வாழ்த்தினுர். பின்னர் பரிசில் கடாநிலையாக மன்னனை நோக்கி,

"ஒருதிசை ஒருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசில் மாக்கள்
வரிசை அறிதலோ அரிதே பெரிதும்
ஈதல் எளிதே மாவண் தோன்றல்
அதுநற்கு அறிந்தினை யாயின்
பொதுநோக்கு ஒழிமதி புலவர் மாட்டே." (புறம். 121)

என்ற பாடலைப் பாடித் தனது கருத்தை மன்னற்கு ஈற்றடி யான் உய்த்துணர வைத்தார். மன்னர்பிரான் மகிழ்ந்து பாரி மகளிரை ஏற்க உடன்பட்டனன். தனது நண்பனின் எண்ணத் தை யினிதுற முடித்தமை கருதி இதுவே யான்பெற்ற பரிசிலாகு மெனக் கபிலர் மிக மகிழ்ந்தார். அத்தருணம் அவ்வையாரும் ஆண்டு வரவே அவர்பால் பாரிமகளிரை ஒப்படைத்துவிட்டு வடக்கிருக்கக் கபிலர் தலைப்பட்டார். இவ்வாறு பாரி மகளிரை திருமுடிக்காரி என்ற மன்னனே ஏற்றுக் கொண்டதாகச் சங்க இலக்கிய ஆராய்ச்சியான் தெரிய வருகிறது.

எனவே, பாரி மகளிரின் திருமணத்தைக் குறித்து ஆராயுங் கால் தெய்வீகனும், திருமுடிக்காரியும் ஒருவராயிருப்பரோ என்ற ஐயம் எழுகின்றதல்லவா? கபிலர் பாரி மகளிரை

அவ்வையாரிடத்து ஒப்படைத்த பின்னர் வடக்கிருக்கச் சென்ற மையானும், தெய்விகனுக்கு இம்மகளிரையே அவ்வையார் திருமணம் செய்து வைத்தார் என்பதையும் நோக்கத் தெய்விக னும், திருமுடிக்காரியும் ஒருவராயிருத்தல் வேண்டுமெனக் கருதற்கு இடமளிக்கிறதல்லவா? தெய்விகன் காலத்தையோ, திருமுடிக்காரியின் காலத்தையோ தெள்ளிதின் உணர்வோ மாயின் ஒருவாறு இவ்வையத்தைப் போக்கிக் கொள்ளலாம். முடிவாகக் கூறப்புகின் கோவலூர் மன்னர்தாம் பாரி மகளிரை ஏற்றுக் கொண்டனர் என்பதைப்புராண இலக்கியமும், சங்க இலக்கியமும் கூறுகின்றன. எனவே, இவ்வாராய்ச்சிப் பகுதியை அறிஞர்பால் விடுத்து மேற்செல்வாம்.

தேசுமிகு தெய்விகன் மாசிலாப் பன்னிரு மகளிரை மனை வியராகக் கொண்டு வாழ்ந்துவரும் நாளில் மகப்பேற்றினையும் எய்தலானுர். "செப்பரும் தெய்விக மன்னன் தேவி காஞ்சன மாலை........" எனத் தொடங்கும் சதகத்தானும் இதன் பின் வரும் இருபாடல்களானும் மக்கட் பேற்றின் மாண்புகள் வெளிப்படு கின்றன. பாண்டியன் மகளாகிய பட்டத்தரசி காஞ்சன மாலைக்கு 'மெய்ப்பொருளார்' என்ற மெய்யன் தோன்றினுர். பின் சின்னுட் செல்ல, சேரன் மகள் பதுமாதேவி என்பார்க்கு 'நரசிங்கமுனையன்' என்ற புதல்வன் தோன்றினுர். இதன் பின்னர் சோழன் மகள் சண்பகமாலையார்க்குக் 'குலச்சிறை யார்' என்ற மகன் பிறந்தார். இம்மூன்று தெய்விகச் செல்வங் களே பின்னர் மெய்ப்பொருள் நாயனுரென்றும், நரசிங்க முனைய நாயனு ரென்றும், குலச்சிறை நாயனுரென்றும் நம்பியாண்டார் நம்பியாலும், சுந்தரமூர்த்தி சுவாமியாலும், சேக்கிழாராலும் போற்றுதற் குரியராக விளங்கினர். இம்மூவரின் வரலாற்றினையும் அரனடி மறவா அருட்டன்மையையும் பெரிய புராணத்தால் விளக்க மாக அறியலாம்.

"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற".

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்கத் தெய்விகத் திருமகனுர் மக்கட்பேற்றின் சிறப்பினை மாந்தலானுர்.

முடிப்புரை :

இவ்வாறு அரச நலங்கள் அனைத்தையும் துய்த்து அயரா இன்பத்துடன் வாழ்ந்திருக்கும் எல்லையில் தனது மக்கள் மூவருக்கும் இளவரசுப் பட்டம் அளித்த தோடல்லாமல், தனது நாட்டை மூன்று பகுதியாக்கி மூவர்க்கும் உரிமைப்படுத்தினர். பின்னர், மூன்று நாயன்மார்களும் தத்தம் நாட்டை மணிமுடி கவித்தும், கண்மணி தரித்தும் செங்கோலோச்சியும் ஆளுந் திறன் கண்டு மகிழும் ஞான்று, முன்வினை வந்துறுத்த முனி மகனுர் முதல்வனுரடி சார்ந்தார். "காசினியை எழுநூறு வய தாண்ட காவலன் மகிமை கண்டாய்" எனச் சதகம் கூறுவ தால் தெய்வீகனுர் நீண்ட நாட்கள் வாழ்ந்திருந்து பின் தனது சாபம் நீங்கப் பெற்று மலையரையனுய்த் திகழ்ந்திருத்தல் கூடும்! இத்தெய்வீக மன்னன் வரலாற்றினை அறிதற்குத் தனியொரு நூல் இருக்கிறதெனச் செவிவழிச் செய்தி செப்பிடினும் இஞ்ஞான்று கிடைத்தற்கரிதா யிருத்தலின் விரித்தற் கியலவில்லை.

இத்தகு தெய்வ மகன் மண்ணிற்றோன்றித் தன் குடிவழி நிறுத்திச் சென்றமைக்குச் சான்ருகத் – தமது மூன்று புதல்வர் களின் வழிகளாக இன்றும் நத்த மன்னர், மலைய மன்னர், சுருதி மன்னர் என்ற இனத்தவர்களாக வாழ்கின்றனர். இவ் வினமக்கள் இன்று குறைந்த அளவில் வாழ்வதோடன்றித் தங்கள் குடிப்பெருமையிற் ருழாவண்ணம் சைவமும் தமிழும் காத்து, குகமுனி கோத்திரத்தினராய் வாழ்ந்து வருகின்றனர்.

முற்றும்

["இவ்வரலாற்றுக் கட்டுரை அருணசலப் புராணத்திலுள்ள அண்ணு மலைச் சதகச் செய்யுள் சிலவற்றைக் கொண்டு ஆய்ந்தெழுதப்பட்டது."]

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 13, இதழ் 6-ன் தொடர்ச்சி]

I

SAMBANDAR

(Tamil: TIRU JNANA SAMBANDAMURTI SWAMI)

21. வெற்றவேயடியாரடிமிசைவிழும்விருப்பினன்வெள்ளைநீறணியுங்
கொற்றவன்றனக்குமந்திரியாயகுலச்சிறைகுலாவிநின்றேத்து
மொற்றைவெள்விடையனும்பரார்தலைவனுலகினிலியற்கையை
[ஒழிந்திட்
டற்றவர்க்கற்றசிவனுறைகின்றவாலவாயாவதுமிதுவே.

The poem from which 20 and 21 are taken consists of stanzas like these alternately praising the queen and the king's minister, the last verse praising them both together.

21. This is Alavay, Siva's abode. To those who forsake the world He reveals Himself as world-forsaking too. Head of the heavenly ones, He rides the one white bull. Praised is He by Kulachchirai, minister of that monarch who wears white ash, and loves to lay himself bare at the feet of Siva's slaves.

(To be Continued)

என்னைப்பற்றி........

புலவர், பனசை,
திரு. சு. சடையப்பன் அவர்கள்,
தமிழாசிரியர், கழக ஆண்கள் உயர்நிலைப்பள்ளி,
பெருந்துறை, (வழி) ஈரோடு.

மைசூர் மாநிலத்தில் 'குடகுவரை' என் தாயகம். பண்ணும் பெண்ணும், பிறந்த இடத்திலேயே இருந்தால் பெருமை ஏது? யானும் பிறப்பிடத்தைவிட்டுப் புறப்படுகின்றேன் பெருமை பெற! கொண்டல் கொட்ட, நிலவண்டலை அள்ளிக் கொண்டு, வெண்டிரையோடு தண்டலைகள் தழைக்கக் கிழக்கு நோக்கிக் கிளம்பினேன். சிறி ஏறிப்பிறிட்டுக் காய்ந்துள இடங்களிற் பாய்ந்து, ஊரார் உள்ளங்களிக்கப் பள்ளத்தில் வெள்ளமாய்ப் 'பள்ளிச் சிறுவனைப் போல்' துள்ளி, எண்ணம் போல வந்த என்னைக் 'கண்ணம்பாடி' என்னுமிடத்து மைசூர் மன்னர், "நீ கங்குகரையின்றி நுங்கு நுரையோடு தள்ளாடி வருகின்ருய்; ஆதலால் சிறிது போழ்து இங்குத் தங்கு! பின் எங்கு வேண்டுமாயினும் போ!" என ஆணையிட்டு அணையுமிட்டார். மன்னவர் சொன்னபின் மறுப்பேது? தங்கிய என்னைப் பயன் படுத்தி மின்னுற்றல் எடுத்து இம்மாநிலத்தார் பெறும் வளமும் நலமும் அம்மா! அளவிடலாகுமோ?

கோலக்கரம் நீட்டிச் சேலம் மாவட்டம் அழைக்க அங்கிருந்து யான் தமிழகம் புகுகின்றேன். 'ஒகனக்கல்'லில் உச்சியிலிருந்து தாழ்ந்து வீழ்ந்து உயர்காட்சி நல்குகிறேன். இங்கு மறுகிக் குறுகி ஆடுதாண்டுமளவிலுள்ளேன். காட்டிற்கு வள முட்டி வரும் என்னை 'மேட்டூரில்' மீட்டும் அணைபோட்டுத் தடை செய்கின்றனர். இங்கு அன்னைத் தமிழகத்திற்கு என்னைப் பயன்படுத்தி மின்னுற்றல் எடுக்கின்றனர். கோவைக் கோட்டத்

தாரின் வாட்டத்தையும் சிறிது ஓட்டிச் சேவை செய்ய, அணை தாண்டித் துணையின்றித் தனியாகவே வருகின்ற எனக்குப் 'பவானி' என்னும் பாவை துணையானாள். துணைகண்ட யான் துணிவோடு பெருகிப் பரவிப் பாய்ந்து வருகின்றேன். வையம் உய்யப் பாய்ந்து நல்ல செய்யாகச் செய்ய வருகையில் இருகை நீட்டி 'நொய்யல்' என்ற மையல் கொண்ட தையலும் என் மெய்யில் பையவே ஒன்றுகிறாள். கருவூராம் திருவூரைக் கடக்கையிலே தடக்கைநீட்டித் தாவி என்னோடு மேவுகிறாள் 'அமராவதி' என்னும் ஆரணங்கு. மூவர் துணையோடு ஓவாதோடி அரங்கமாநகரை அடைகையில் என்மகளாம் 'கொள்ளிடம்' எனும் மெல்லியலாள் முரிந்த மனத்தினளாய்ப் பிரிந்து செல்லவே அல்லல் மிக்கு அரங்கத்து வள்ளல் அடியலம்பிப் புலம்பி அழுது தொழுது அகல்கிறேன்.

திரையோடும் நுரையோடும் நிறைவுற்றுக் கரையின்றி வரைகடந்து கட்டின்றித் திட்டேறிச் சென்ற எனக்குக் கரையென்னும் சிறையிட்ட 'கரிகாற் பெருவளத்தான்,' "பொங்கி வந்த மங்காய்! நெடும் போழ்து இவண் தங்காய் எனினும் நீ தொலைவிருந்து மலையிறங்கி அலைவுற்றுக் களைப்போடும் இளைப்போடும் வந்துள்ளனை! அதனால் இக்'கல்லணை'யை மெல்லணையாக் கொண்டுறைந்து குறும்போது துஞ்சி அல்லல் தள்ளிச் செல்லல் நல"மென்றான்.

கொஞ்ச போதங்குத் துஞ்சிய யான், நன்செய்வள முட்டத் தஞ்சமென வந்தோரின் பஞ்சம் போக்கும் தஞ்சையை யொட்டித் தருக்கோடு செல்கின்றேன். என் மக்கள் ஐவர் இங்கே ஒருங்கே பிரிதல் கண்டு, ஐயா! 'ஐயாறு' என்கின்றீர் இவ்விடத்தை. பின் 'மடந்தையென' நடந்து 'குடந்தை' கடந்து ஒயிலாகச் சென்று 'மயிலாடுதுறை' காண்கிறேன்.

முடிவு எனக்குத் தொலைவிலில்லை என்பதனை இங்கு வந்ததும் உணர்கிறேன். என்மெய்யில் வெயில் படலாகாது என எண்ணி மருங்குள மரம்யாவும் சிரந்தாழ்த்தி மலர் சொரிந்து அழல்படா வண்ணம் நிழல்செய்து காக்கின்றன. இப்படி யான் ஒன்னார்கள் புகவொண்ணாத் தன்னிகரில் சென்னியின் தலை

நகராம் 'புகாரின்கண்' புகுகின்றேன். என்னிடம் இப்போது முன்னைய பொலிவில்லை! வலிவில்லை! ஆற்றலில்லை! தோற்ற மில்லை! அடல்குன்றி உடல்குன்றிக் கடலின்கண் கலக்கின் றேன். வங்கக் கடலில் தங்கியபின் புலந்து முன்பிரிந்த என் மக்களும் இங்குத்தான் கலந்துள்ளார்கள் என்பதனைக் கண் டேன்! களிப்புக் கொண்டேன்! பிரிந்தவர் கூடினுல் பேசவும் வேண்டுமோ?

அன்னநடை போட்ட கன்னியிவள் யாரென்று எண்ணி மயங்குதல் ஏன்? சென்னியின் ஆறென மன்னியோடும் 'பொன்னி'தான் யான்! 'காவேரி'யும் என்பெயரே!

பொன் கொழித்து மண்செழிக்க வருமென்னைக் கூடிப் படிந்து நீராடிப் பாடிப் பரவி ஆடிப் பதினெட்டில் மக்கள் வாழ்த்தித் தலைதாழ்த்துகின்றனர். பூவிரிக்கும் காவிரிக்கத் தாவியோடுங் காவிரியாம் என்னைப் பாவிரிக்கும் புலவர்கள் நாவலிக்கப் பாடினர்–பாடுகின்றனர். என்னை, 'வான்பொய்ப் பினும் தான்பொய்யா வளம்' உடையவளென்ருர் ஒருவர். 'காவிரி'–தளர்வழிக்கும் ஆறு........தமிழர் பெற்றபேறு.......என் றெல்லாம் மக்கள் என்னைப் போற்றிக் கூறுதல் என்செவியில் ஏறும்போது வீறுதோன்ற யான் ஏறுநடை போடுதலில் தவ றுண்டோ? கூறுமின்!

அருள்மொழி

வித்துவான், திரு. வே. சுப்பிரமணியன் அவர்கள்,
தமிழ் ஆசிரியர்,
திரு வெங்கடகிருஷ்ண உயர்நிலைப்பள்ளி,
கணியூர், கோவை.

மனிதனின் பிறவி ஈடு இணையற்ற தனிப்பிறவி. உயிர்கட்கு அப்பிறவி வாய்ப்பது அரிதாம். அவ்வரிய பிறவியில் செயற்கு அரிய செய்து அருளாளர்களாய்த் திகழ்ந்தவர் பலர். அன்பிலே வித்தி விளைந்த அருள் அழியாத்தன்மை யளித்து அவர்களை அமரராக்கியது எனின் அதன் தன்மையை இயம்புவார் யாரே!

அவ்வித அருள் தன்மைக்கு முன்புள்ள இருள், மருள், தெருள் ஆகியவற்றைப் பற்றி அறிய வேண்டுவது இன்றியமையாததாகின்றதல்லவா? மனித அறிவானது இருள் நிலையிலிருந்து மருள், தெருள், அருள் ஆகிய நிலைகளில் வளர்ச்சியடையும் தன்மையைப் பெற்றுள்ளது. மிருகங்களுக்கு இத்தகைய அறிவு வளர்ச்சி இல்லை; இருள் மயமான அறிவு நிலை உண்டு. ஆனால் பிறவி முன்னேற்றம் இயற்கையில் நிகழ்கின்றது. இதனை,

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்ப்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்."

என்ற மணிவாசகப் பெருமானின் திருவாக்காலும் அறியலாம்,

இருள் என்பது அறியாமை எனப்படும். ஒரே இருட்டாக உள்ள இடத்தில் ஒன்றுமே புலப்படுவதில்லை. அத்தகைய இருள் அச்சத்தையும் துன்பத்தையும் நல்குவதாகும். அத்தகைய இருளைத்தான் "ஆர்இருள்" என்றார் வள்ளுவர். ஆர்இருள் என்ற சொல் நரகம் என்று பொருள்படும். அத்தன்மையோடு பிறக்கும் மனிதர் நரகர் என்று கூறப்பட்டனர். அக்கொடிய இருள் தன்மையோடு கூடிய மனிதரின் விழிவழிச் செல்லும் ஒளியும் இருள் அடைந்து விடுகிறது. "விழியின் ஒளியும் இருளே" என்று இது பற்றியே கூறினர் போலும்! இருள் நிறைந்த மக்கள் வாழ்க்கை நரக வாழ்க்கை யாகின்றது. அதனால் 'பாமரர்' என்ற பெயரையும் சூடுகின்றனர். பாமரர் என்ற சொல்லுக்கு ஒன்று மறியாதவர் என்று பொருள்படும். எனவே, அஃதைச் சிந்திக்குங்கால் இருளால் மூடிக்கிடப்பவர் என்ற பொருளில் வந்து முடிவதைக் காணலாம். இருள் நிறைந்த மக்களைத்தான் வள்ளுவர் "விலங்கொடு மக்கள் அனையர்" ஒன்று குறிப்பிட்டார். அத்தகைய கொடிய இருளகற்றும் அருமருந்து கல்வியேயாகும். "மம்மர் அறுக்கும் மருந்து" என்று கல்வியைக் குறிப்பிட்டார் சமண முனிவர். தாயுமானவரும்,

"ஏதுந்தெரியா தெனை மறைத்த வல்லிருளை."

என்றார்.

மருள் மயக்கம் எனப்படும். மயக்கமாவது பொய்த் தோற்றங்களையும், நிலையற்ற பொருள் முதலியனவற்றையும் உண்மைப் பொருள் என்று நினைந்திருத்தலாகும். வள்ளுவனார்,

"பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானும் மாணப் பிறப்பு"

என்று விளங்க உரைத்தருளினமையும் உள்ளங்கை நெல்லிக் கனியன்றோ! மருள் நிரம்பிய பிறவியானது பெருமையற்றதோடு வீணனது என்பதையும் கூறியருளியுள்ளார். மருளுக்குக் காரணமாய் நிற்பன நான் எனது என்னும் அகப்பற்றும், புறப் பற்றுமேயாம் என்பர். அஃதானது பிறப்பின் பெருமையை அறிய அரிதாக்கிக் கண்ணால் கண்டதை யெல்லாம் மெய்

யென்று நம்பச் செய்கிறது. சூழ உள்ள பொருள்களையும், தோற்றங்களையும் ஆய்ந்து நோக்கி அறியின் மருள் விலகித் தெருள் ஏற்படும்.

தெருளாவது தெளிவு எனப்படும். தெளிவாவது காணும் தோற்றத்தையும், பொருளையும் முடிவுநிலை காணும் வரையில் ஆராய்ந்து சென்றால், இறுதியில் நிற்கும் நிலையே யாகும். அவ்வாறு துருவித் துருவி ஆராயும்போது முடிவில் யாவும் தாமே அழியக்கூடியன; நிலையற்றவை என்பனவற்றை உணர்வர். அவ்வாறு ஆய்ந்து காணும் கல்வியைத் தான் இக்காலத்தார் விஞ்ஞானக்கலை என்பர். இதே முறையில்தான் ஆன்றோர்கள் யாவற்றையும் ஆய்ந்து எல்லாம் நிலையற்றது என்று உணர்ந்து, அவற்றிலேயே மேலும், மேலும் காலத்தைக் கழிக்காமல், அவைகளை வேண்டுவோர் நன்கு ஆய்ந்து கொள்ளட்டும் என்று விட்டு, ஆன்மவிசாரத்தைக் கொண்டுத் தெளிவடைந்தனர். அதனால் அவர்களிடத்தில் அன்பு, அறிவு, தேற்றம், ஆசையின்மை ஆகிய அருங்குணங்கள் விளங்கின. தெய்வப்புலவர் திருவள்ளுவனாரும்,

"அன்புஅறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு"

என்று அருளியுள்ளமையும் தக்க சான்றா மன்றோ! அவர்கள் தனக்கென வாழாது பிறர்க் கெனவே வாழ்ந்தனர். அவர்கள் தம் சொல் வன்மையால் யாவரும் நல்வழிப்பட வேண்டி நூல் வாயிலாகவும், சொற்பொழிவுகள் மூலமாயும் சிறந்த கருத்துக்களை வெளியிடுவராயினர். அவ்வாறு தெருள் நிலையில் தோய்ந்து முதிர்ந்த அவர்தம் அறிவு அருள் நிறைந்ததாகியது. அவர்கள் அருளாளர் எனப்பட்டனர்.

அவ்வருள் நிலையில் நின்ற பெரியோர்கள் பலராவர். புத்தர், இயேசுநாதர், திருவள்ளுவர், இளங்கோவடிகள், மாணிக்கவாசகர், சங்கரர், நபிநாயகம், தாயுமானவர், குமரகுருபரர், இராமலிங்க அடிகள், இராமகிருஷ்ண பரமஅம்சர் முதலியோர் குறிப்பிடத் தக்கவர் ஆவர். ஈண்டுச் சிலரது அருள்மொழிகளைக் காண்போம்.

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தின் ஈற்றில், ‘கோவலன் கண்ணகியின் கதையை விளக்கமாகக் கேட்டறிந்த தகுதி வாய்ந்த மேன்மையுடைய நல்லோரே! வளமிக்க இவ்வுலகில் வாழும் மக்களே! பிறர்க்குக் கவலை தருதலையும், துன்ப முண்டாக்குதலையும் முறைப்படி விட்டொழியுங்கள்; தெய்வம் உண்டு என்று உணர்ந்து கொள்ளுங்கள்; கடவுளை உணர்ந் தோரை விரும்பிப் போற்றுங்கள்; பொய் கூறுதற்கு அஞ்சுங் கள்; புறங்கூறுதலை அகற்றுங்கள்; புலால் உண்ணுதலை விலக் குங்கள், உயிருடன் வாழ்வனவற்றைக் கொல்லுதலை விட்டொழி யுங்கள்; தானத்தைச் செய்யுங்கள்; பலவகைத் தவங்களையும் மேற்கொள்ளுங்கள்; பிறர் செய்த உதவியை மறவாதீர்கள்; தீயோரது நட்பை இகழ்ந்து விலக்குங்கள்; பொய்ச் சாட்சிகூறப் போகாதீர்கள்; உண்மையை விடாமல் பின்பற்றுங்கள். அற வழியில் செல்லும் சான்றோர்களுடைய சபையினை விட்டு விலகா மல் சேர்ந்திருங்கள்; மற்றப் பாவ வழியில் புகும் தீயோர்களு டைய சபையிலிருந்து தப்பி நீங்குங்கள்; பிறர் மனைவியை விரும்புதலை அஞ்சுங்கள்; துன்பமடைந்து வருந்தும் உயிர்களைக் காப்பாற்றுங்கள்; இல்லறத்தைப் போற்றிச் செய்யுங்கள்; பாவச் செயலை நீக்குங்கள்; கள்ளையும், திருட்டையும், பொய்யையும் பயனற்ற சொற்களைப் பேசும் வீணர் கூட்டத்தையும் விரைவில் தந்திரமாய் ஒழித்து விடுங்கள்; இளமைப் பருவமும், பொருளும் உடலும் நிலையில்லாதன; நமக்குள்ள வாழ்நாட்கள் சென்று கழியாமல் இராது. நம்மைச் சேரவேண்டிய துன்பங்கள் அடையாமல் நீங்காது; ஆகவே சென்றடையப் போகும் பேரின்ப உலகிற்கு உற்றதுணையாகிய அறத்தினை நாடிச் செய்யுங்கள்” என்று திருவாய் மலர்ந்தருளிய பொன்மொழி களை அருள்மொழியாக் கொள்ளல் நம் கடமை யன்றோ!

மன்னுயிர்க்காகத் தன்னுயிரை ஈந்த இயேசுநாதர் அருளிய அருள் மொழிகளில் சிலவற்றைக் காண்போமாக. ‘யான், எனது என்னும் செருக்கற்றவன் பாக்கியவான். ஏனென்றால் ஆண்டவனது அருள்வாழ்வு அவனுக்குச் சொந்த மாகிறது. அடக்கத்தோடு கூடிய பொறுமையே வடிவெடுத்த வர்கள் பாக்கியவான்கள். ஏனென்றால் அவர்கள் பூமியாள்

வார்கள். அறநெறியை நாடிப் பசிகொண்டவர்கள் பாக்கிய வான்கள். ஏனென்றால் அவர்கள் அறநெறியின் உருவாய் அமைந்து விடுவார்கள். மனம் பரிசுத்தம் உடையவர்கள் பாக்கியவான்கள். ஏனென்றால் அவர்கள் மனத்தகத்து இறைவனைக் காண்பார்கள். உலகெங்கும் சாந்தியைக் காண்பவர்கள் பாக்கியவான்கள். ஏனென்றால் அவர்கள் கடவுளின் குழந்தைகள் எனக்கூறப்படுகிறார்கள்.'' இவை போன்ற பலவாகும்.

நபிநாயகம் அவர்கள் "ஆண்டவன் பரிசுத்தமானவன். அவன் உண்மையையும் பரிசுத்தத்தையுமே விரும்புகிறான். தன்னுடைய சிம்மாசனத்தின் கீழ்ப் புதையல்களை வைத்திருக்கிறான். இவற்றிற்குரிய திறவுகோல்கள் . வித்துவான்களின் நாக்குகளாயிருக்கின்றன." என்றார்.

அறிவைத் தேடிக்கொள்க. அறிவுள்ளவனை அவ்வறிவானது நன்மை, தீமை இன்னதென உணர்ந்துகொள்ளும்படி செய்கின்றது. நண்பர்களின் முன்னே ஓர் ஆபரணமாயும், எதிரிகளின் முன்னே ஒரு கவசமாயும் அமைந்திருக்கிறது. பொய் சொல்வதையும், புறம் பேசுவதையும் விட்டுவிடாத மனிதன், நோன்பை மட்டும்கொண்டு எவ்வளவு பட்டினி கிடந்தாலும் ஆண்டவன் அவனை ஏற்கமாட்டான். இவ்வுலகத்தை நேசியாமலிரு. அப்போது ஆண்டவன் உன்னை நேசிப்பான். மனிதர்களுடையதைப் பார்த்து ஆசைப்படாதே. அப்போது அவர்கள் உன்னை நேசிப்பார்கள்.

கோபமே எல்லாத் தீவினைகளுக்கும் காரணமாயிருக்கிறது. பொறாமையினின்றும் நெடுந்தூரம் விலகிக்கொள்ளுங்கள். ஏன் என்றால் தீயானது விறகைத் தின்பது போல நற்காரியங்களின் நன்மைகளையெல்லாம் தின்றுவிடுகிறது. "அன்புடன் பிறர் பசியாற்றியவனே பரலோகத்தைப் பெறுகிறான்'' என்றெல்லாம் அருளியுள்ளார். தாயுமானவர்,

"அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே."

என்றருளிய மூலமந்திரமும் உன்னற் குரியதே. மற்றும் அவர்

"அங்குஇங்கு எனுதபடி யெங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததுஎது தன்னருள் வெளிக்குள்ளே
அகிலாண்ட கோடியெலாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துஉயிர்க் குயிராய்த்
தழைத்ததுஎது மனவாக்கினில்
தட்டாமல் நின்றதுஎது சமயகோடி களெலாந்
தந்தெய்வம் எந்தெய்வம்என்று
எங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதுஎது
எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமாய்
என்றைக்கும் உள்ளதுஎது மேல்
கங்குல்பகல் அறநின்ற எல்லையுளது எதுஅது
கருத்திற்கு இசைந்ததுவே
கண்டன வெலாம்மோன வுருவெளியதாகவுங்
கருதியஞ்சலி செய்குவாம்."

என்றிவ்வாறு அருளிச்செய்த அருள்மொழிப்பாடல்கள் பலவாம்.

திருவருட் திரு குமரகுருபர சுவாமிகள் தாம் அருளிய நீதி நெறி விளக்கத்தில் "இளமைப் பருவமானது நீரில் உண்டாகும் நீர்க்குமிழிபோல நிலைத்திராது அழிந்துபோகும் தன்மையை யுடையது; நிறைந்த செல்வமானது நீரினிடத்துக் காற்றினுலே சுருட்டப்படும் பெரிய அலைகளைப்போல நிலையற்றதாகும்; உடம்பு நீரின்மேல் எழுதிய எழுத்துப்போல நிலையில்லாததாகும். ஆகையால் நம்மவர்களே! நமது தலைவராகிய கடவுளுடைய சபையைச் சார்ந்து அவரைத் துதிக்காமல் இருப்பது என்ன காரணமோ?" என்று அருளிய மணிமொழியாகிய அருண்மொழி சாலச் சிறந்ததன்றே!

"நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாத(து) எம்பிரான் மன்று."

என்பதே அந்தப் பாடல்.

நம்மவர்களே! நீங்கள் இளமையும் செல்வமும் உடம்பும் நிலையில்லாதன வென்பதை அறிந்தும் விரைந்து கடவுளைத் தொழாமல் இருப்பது ஏன்? இப்போதே கடவுளைத் தொழுதல் வேண்டும் என்பதை அறிவுறுத்தினாராயிற்று. இவைபோன்ற மணிமொழியான அருள்மொழிகள் பல இவர் அருளியுள்ளார்.

அருளாளரான இராமலிங்க அடிகள் பாடிய அருட்பா படித்தாலும், படிக்கப் பக்கநின்று கேட்டாலும், பரிந்து உள் உணர்ந்தாலும் இத்தனைக்கும் தித்திக்கும். உள்ளம் உருக்கிடும் அருள்மொழிகளே யன்றி வேறென்றன்று.

"அருட்சோதித் தெய்வமெனை ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம்
பொருட்சாரு மறைகளெல்லாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வமுயர் நாதாந்தத் தெய்வம்
இருட்பாடு நீக்கிஒளி ஈந்தருளுந் தெய்வம்
எண்ணியநான் எண்ணியவா றெனக்கருளும் தெய்வம்
தெருட்பாடல் உவந்தெனையும் சிவமாக்குந் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்."

"தாயெலாம் அனையவென் தந்தையே யொருதனித்
தலைவனே நின்பெருமையைச்
சாற்றிட நினைத்திட மதித்திட அறிந்திடச்
சார்கின்ற தோறும் அந்தோ
வாயெலாம் தித்திக்கும் மனமெலாம் தித்திக்கும்
மதியெலாம் தித்திக்கும்என்
மன்னியமெய் யறிவெலாம் தித்திக்கும் என்னில்அதில்
வரும்இன்பம் என்புகலுவேன்."

என்றவாறெல்லாம் அவர் அருளியுள்ளார்: அன்பிலே முதிர்ந்த அருளாளர்கள் கண்டு போற்றிக் கூறிய நன்மொழிகளே அருள்மொழியாம்.

பாட்டியல்

மதுரகவி மரபினர்,
திரு. T. N. N. கவிக்குஞ்சரப் பாவலர் அவர்கள்,
மெயின்ரோடு, வாளாடி P. O. திருச்சிராப்பள்ளி.

[மலர் 13, இதழ் 7-ன் தொடர்ச்சி]

வருணப் பொருத்தம். 5.

பாற்பொருத்தத்தின்கண் தேர்ந்தெடுத்த எழுத்துக்கள் வருணப் பொருத்தத்திற்கும் ஒத்து இருக்கின் மிக்க சிறப்பாகை யான் ஐந்தாவது வருணப் பொருத்தம் கூறலுற்றும்.

தண்டமிழ் எழுத்துக்களை அந்தணர், அரசர், வணிகர், சூத்திரர் எனும் நான்கு வருணங்களாகப் பாட்டியலார் வகைப் படுத்தினர்.

அவைகள் வருமாறு :–

(அந்தணர் சாதிக்குரிய எழுத்துக்கள்)

நறுமலர்த் திசைமுகன் ஈசன் நாரணன்
அறுமுகன் படைத்தன அந்தணர்சாதி. –பன்னிருபாட்டியல்.

(இ - பொ) மணம் பொருந்திய மலர்மாலையைத் தரித்திலங் கும் நான்முகனும், சிவபெருமானும், நாரணனும், அறுமுகப் பெருமானும் படைத்த எழுத்துக்கள் அந்தணர் சாதி எழுத்துக் களாம்.

அந்நால்வர் படைத்த எழுத்துக்கள் யாவை? யெனின் காட்டுதும்.

திசைமுகன் படைத்த எழுத்துக்கள் : அகர முதல ஔகார இறுவாய் உள்ள பன்னிரண்டுயிர்கள்.

ஈசன் படைத்த எழுத்துக்கள்: க்-ங் என்னும் இரண்டு மெய்களும், இம்மெய்களின் மீது பன்னீருயிரும் ஏறத்தோன்றிய உயிர் மெய்களுமாம்.

நாரணன் படைத்த எழுத்துக்கள்: ச்-ஞ் என்னும் இரண்டு மெய்களும், இம்மெய்களின் மீது பன்னிருயிரும் ஏறத்தோன்றிய உயிர் மெய்களுமாம்.

அறுமுகன் படைத்த எழுத்துக்கள்: ட்-ண் என்னும் இரண்டு மெய்களும், இம்மெய்களின் மீது பன்னிருயிரும் ஏறத் தோன்றிய உயிர் மெய்களுமாம்.

மேற்கோள்

திருமால் அரனே திசைமுகன் குமரன்
மரபிற் படைத்தன மறையவர் சாதி. —பரணர்.

(அரசர் சாதிக்குரிய எழுத்துக்கள்)

இந்திரன் வெங்கதிர் சந்திரன் படைத்தன
துன்னரும் சிறப்பின் மன்னவர் சாதி. —பன்னிருபாட்டியல்.

(இ-பொ) இந்திரன், கதிரோன், சந்திரன் ஆகிய இம் மூவர் படைத்த எழுத்துக்கள் அரசர் சாதியாம்.

அம்மூவர் படைத்த எழுத்துக்கள் வருமாறு:-

இந்திரன் படைத்த எழுத்துக்கள்: த்-ந். என்னும் இரண்டு மெய்களும், இம்மெய்களின் மீது பன்னிருயிரும் ஏறத்தோன்றிய உயிர் மெய்களுமாம்.

கதிரோன் படைத்த எழுத்துக்கள்: ப்-ம். என்னும் இரண்டு மெய்களும், இம்மெய்களின் மீது பன்னிருயிரும் ஏறத்தோன்றிய உயிர் மெய்களுமாம்.

சந்திரன் படைத்த எழுத்துக்கள்: ய்-ர். என்னும் இரண்டு மெய்களும், இம்மெய்களின் மீது பன்னிருயிரும் ஏறத் தோன்றிய உயிர் மெய்களுமாம்.

மேற்கோள்:

இந்திரன் இரவி சோமன் இம்மூவர்
தந்த எழுத்தே அரசர் சாதி. —பன்னிருபாட்டியல்.

ஒழியா வுயிரனைத்து மொற்றுமுத லாறும்
அழியா மறையோர்க்கா மென்பர்—மொழியும்
அடைவேயோ ராறு மரசர்க்கா மென்பர்
படையாத சாதிகளின் பண்பு. —வெண்பாப் பாட்டியல்.

(வணிகர் சாதிக்குரிய எழுத்துக்கள்)

திருமிகு நிதிக்கோன் வருணன் படைத்தன
அணிமிகு சிறப்பின் வணிகர் சாதி. — பன்னிரு பாட்டியல்.

(இ-பொ) நிதிக்கோனாகிய குபேரனும், வருணனும் படைத்த எழுத்துக்கள் வணிகர் சாதியாம்.

அவ்வெழுத்துக்கள் வருமாறு :

நிதிக் கோன்படைத்த எழுத்துக்கள்: ல் - வ் என்னும் இரண்டு மெய்களும், இம்மெய்களின் மீது பன்னிருயிரும் ஏறத் தோன்றிய உயிர் மெய்களுமாம்.

வருணன் படைத்த எழுத்துக்கள்: ற் - ன் என்னும் இரண்டு மெய்களும், இம்மெய்களின் மீது பன்னிருயிரும் ஏறத்தோன்றிய உயிர் மெய்களுமாம்.

மேற்கோள் :

வருணன் நிதிக்கோன் என்றிவர் படைத்தன
வசைதீர் சிறப்பின் வணிகர் சாதி. — பரணர்,

(சூத்திர சாதிக்குரிய எழுத்துக்கள்)

கூற்றுவன் படைத்தன கூற்றன இரண்டும்
ஏத்திய மரபிற் சூத்திர சாதி. — பன்னிருபாட்டியல்.

(இ - பொ) கூற்றுவனாகிய இயமன் படைத்த இரண்டெழுத்துக்களும் அக்கூற்றுவனைப் போன்றனவாம். அத்தன்மையான இரண்டெழுத்துக்களும் சூத்திர சாதியாம்.

அவ்வெழுத்துக்கள் வருமாறு :—

ழ். ள். என்னும் இரண்டு மெய்களும், இம்மெய்களின் மீது பன்னிருயிரும் ஏறப்பிறக்கும் உயிர்மெய்களுமாம்.

மேற்கோள் :

இயமன் படைத்த இருவகை எழுத்தும்
துகடீர் மரபிற் சூத்திர சாதி. — பரணர்.

பண்பார் வணிகர்க்காம் பாங்கில் லவறனக்கண்
மண்பாவுஞ் சூத்திரர்க்கா மற்றையவை—நண்பா

லரனரிசேய் மால்கதிர்கூற் ருய்மழைபொன் மெய்க்குப்
பிரமன் படைப்புயிர்க்குப் பேசு. — வெண்பாப் பாட்டியல்.

எழுத்துக்களை மொழிகளில் நிற்கும் நிலைகளினுனும், படைத்தோர்களின் தன்மையினுனும், நான்கு வருணங்களாகக் கொண்டனர் என அறிக.

ஈண்டு மேற்கோளாகக் காட்டிய வெண்பாப் பாட்டியல் சூத்திரத்திற் கொப்பவே பன்னிருபாட்டியலும் எழுத்தியலின் கண் எழுத்துக்களைப் படைத்த தேவர்களின் பெயர்களைக் கூறு நின்றது.

அச்சூத்திரங்கள் வருமாறு :—

சிறப்புடை எழுத்தின் பிறப்பினி துரைப்பின்
முன்நான் குயிரும் முதல்வன் படைத்தனன்.
— பன்னிருபாட்டியல்.

பன்னிரண்டு உயிரெழுத்துக்களையும் பிரமன் படைத்த செய்தியை இச்சூத்திரம் இயம்புகின்றது.

கண்ணுதல் திருமால் கதிர்வேல் முருகன்
விண்ணவர் தலைவன் வெங்கதிர் வெண்மதி
நிதிக்கோன் கூற்றுவன் நெடுநீர் வருணன்
என்னுங் கடவுளர் ஈரிரண்டாக
மன்னிய வொற்று வகைவேறு படைத்தனர்.
— பன்னிரு பாட்டியல்.

(இ - பொ) கண்ணுதலாகிய சிவபெருமான், திருமால், கதிர்வேலைத் தாங்கிய முருகன், விண்ணவர் தலைவனுகிய இந்திரன், கதிரோன், சந்திரன், நிதிக்கோனுகிய குபேரன், இயமன், மழைக்கதிபதியாகிய வருணன் ஆகிய ஒன்பது தேவர்களுள் ஒவ்வொருவரும் முறையே இரண்டிரண்டு மெய்களாகப் பதினெட்டு மெய்களையும், அவ்விரண்டிரண்டு மெய்களின்மீது பன்னிருயிரும் ஏறப் பிறக்கும் உயிர் மெய்களையும் படைத்தனர்.

"வகைவேறு படைத்தனர்" என்றதனுன் மெய்களைப் படைத்தோடமையாது அத்தேவர்கள் உயிர் மெய்களையும் படைத்தனர் எனக் கூறப்பட்டது.

"மன்னிய வொற்று வகைவேறுபடைத்தனர்" என்பதன் கண் உம்மைகள் இரண்டும் தொக்கி நின்றன,

ஈண்டு 'வகை' என்பது இனம் எனப் பொருள்படும். உயிர் இனம், மெய் இனம் உயிர்மெய் இனம், என்னும் மூவினங்களுள் உயிர் இனத்தை நான்முகன் படைத்தனன் எனமுன்னர் கூறிய வர் பின்னர் கண்ணுதல் என்னும் சூத்திரத்தின்கண் ஒன்பது தேவரும் மெய்இனத்தைப் படைத்து பின் உயிர்மெய் இனத்தை யும் படைத்தனர் என்றார்.

உரையாசிரியர் கருத்து வேற்றுமை.

"மன்னிய வொற்று வகை வேறு படைத்தனர்" என்பதன் கண் ஒற்று எனப் பொதுப்படக் கூறினாரேனும் அஃது உயிரு டன் கூடிய ஒற்றினை (உயிர் மெய்யை)த் தான்குறிக்கும் எனும் கருத்தில் பன்னிருபாட்டியல் உரையாசிரியர் பகர்ந்தார்.

மற்றும் இலக்கண விளக்கப் பாட்டியல் உரையாசிரியரும் அங்ஙனமே பொருள் கொண்டார். அஃதாவது :- "ஒற்றெனப் பொதுப்படக் கூறினாரேனும், உயிரோடு கூடிய மெய்யென்றே கோடும்" என்றார்.

இங்ஙனம் அவர்கள் இயம்புவது எட்டுணையும் பொருந்து மாறில்லை. அஃது மயக்க உரையே யாம்.

என்னை? யெனின் இயம்புதும்.

விளக்கம் :

"எழுத்தெனப் படுப
அகர முதல னகர இறுவாய்
முப்பஃதென்ப
சார்ந்து வரல் மரபின் மூன்றலங்கடையே."

எனத் தண்டமிழ்க் களஞ்சியமாகிய தொல்காப்பியமும், "உயிரும் உடம்புமா முப்பது முதலே" என நன்னூலும், முதலெழுத்துக்கள் முப்பது எனக் கூறுதலான் முதன்முதலாகப் படைக்கப் பெற்ற எழுத்துக்கள் முப்பது என்பதற்குத் தடை இல்லையாம்.

மற்றும் முதலெழுத்துக்களாகிய உயிர் எழுத்துக்களையும், மெய்யெழுத்துக்களையும், படைத்திராவிடின் சார்பெழுத்துக் களாகிய உயிர்மெய்யெழுத்துக்கள் எங்ஙனம் தோன்ற இயலும்? இயலாதன்றோ?

ஆகையான் அவர்கள் ஒற்று என்பதற்கு உயிர் மெய் என்று பொருள் கூறுதல் பொருந்தாது எனஅறிக.

பன்னிருயிரும் நான்முகன் படைத்த பின்னர் கண்ணுதல் முதல் வருணன் ஈறுகச் சொல்லப்பட்ட ஒன்பது தேவரும் உடம் பாகிய ஒற்றெழுத்துக்களை முறையே இரண்டிரண்டாகப் படைத்த பின்னர் (அங்ஙனமே இரண்டிரண்டு மெய்களின்மீது பன்னிருயிரும் ஏறப்பிறக்கும்) உயிர் மெய்களையும் அத்தேவர் களே படைத்தனர் என்று கோடலே பொருந்துமாம் என அறிக.

(உயிர் மெய்க்காவதோர் சிறப்பிலக்கணம்)

ஒற்றுமைக் காலையும் வேற்றுமைக் காலையும்
பிறவியும் வருணமும் பெறுமென மொழிய. — பன்னிருபாட்டியல்.

(இ-பொ) ஒற்றுமை நயத்தான் உயிர்மெய்யெழுத்துக் களை ஒன்றெனக் கொண்ட காலத்தும், வேற்றுமை நயத்தான் உயிரும், மெய்யும் என இரண்டாகக் கொண்ட காலத்தும், அவ் வுயிர் மெய்யெழுத்துக்கள் முன்னர்க் கூறிய பிறப்பும் வருண முமே. பெறும்.

மெய்யெழுத்துக்களைப் படைத்த தேவர்களே உயிர் மெய் யெழுத்துக்களைப் படைத்த காரணத்தினும், மெய்முன்னும் உயிர் பின்னுமாக நிற்றலினும், மெய்க்கும், உயிர்மெய்க்கும் பிறப்பும் வருணமும் ஒன்ருமென அறிக.

எம்மெய்க்கு எவ்வருணம் கூறப்பட்டுள்ளதோ அம்மெய் யின் மீது பன்னிருயிரும் ஏறப்பிறக்கும் உயிர்மெய்களும் அவ் வருணத்தைச் சாரும்' எனக் கொள்க.

உயிர் மெய்போல ஒற்று மிம்முறைபெறும்

இச்சூத்திரம் பன்னிருபாட்டியல் நூற்சூத்திரமன்ரும். என்னே? யெனின், முன்னர் உயிரினம், மெய்யினம், உயிர்மெய் யினம், ஆகிய மூவினங்கட்கும் பிறப்பிம் வருணமும் கூறிய பன்னிருபாட்டியலார் மீண்டும் "உயிர் மெய் போல ஒற்றுமிம் முறைபெறும்" எனக் கூருர். அங்ஙனம் அவர் கூறியதாகக் கொள்ளின் 'கூறியது கூறல்' எனும் குற்றமாய் முடியும். ஆகையான் இச்சூத்திரம் பிறபாட்டியலின் சூத்திர மென்றும்

பின்னோர் எடுத்தாண்டிருத்தல் வேண்டு மென்றும் கொள்ளு தலே முறையாம்.

ஈண்டு விரிக்கின் பெருகுமாகையான் மேற்செல்லுவாம்.

(மேற்கோள் கூறல்)

உயிர்மெய் வழக்கம் மெய்வழக் காகும்
வேற்றுமைக் கண்ணே என்றூர் பிறரும். – பன்னிருபாட்டியல்.

இச்சூத்திரம் பன்னிருபாட்டியல் நூலாசிரியர் காட்டிய மேற்கோட் சூத்திரமாம்.

(இ-பொ) பிறப்பினுனும், வருணத்தினுனும், உயிர் மெய் யெழுத்தை வேற்றுமை நயத்தான் இரண்டெனக் கொண்ட காலத்தும் மெய்யெழுத்தை வழங்கும் வழக்கமாகவே கொள்ளப் படும் எனப் பிறபாட்டியலாரும் பகர்ந்தனர்.

கருத்து மெய்க்கு உரிய வருணமே உயிர் மெய்க்குமாம் எனப் பிற பாட்டியலாரும் பகர்ந்தனர் என்பதாம்.

(வருணப்பொருத்தம் அமைக்கும் விதம்)

நால்வகை வருணத் தோர்க்கும் நால்வகை
இயம்பும் எழுத்தை இயம்புவர் முதன்மொழி
மற்றவை மயங்கினும் வரையார் ஆண்டே.–பன்னிருபாட்டியல்.

(இ-பொ) அந்தணர், அரசர், வணிகர், சூத்திரர் எனும் நால்வகை வருணத்தோர்க்கும் நால்வகையாக மொழிந்த எழுத்தை (அவ்வருணத்திற்கு உரிய எழுத்துக்களை ஆய்ந்து முதன்மொழியின்கண் நிற்றற்கு உரியதாய் இருக்கின்) முதன் மொழியின் முன்னெழுத்தாக அமைப்பர். அங்ஙனம் முதன் மொழியின் முன் நிற்றற்குரிய ஆற்றல் இல்லாத எழுத்துக்களை உடைய வருணத்தினர்க்குப் பிறவருணத்திற்குடைய எழுத்து மயங்கிமுதன் மொழியின்கண் வரினும் நீக்காது கொள்வர் புலவர்.

விளக்கம் :

“மற்றவை மயங்கினும் வரையார் ஆண்டே” எனக்கூறிய தென்னே?யெனின், காட்டுதும்.

ல்-வ்-ற்-ன் என்னும் நான்கு ஒற்றுக்களும் அவ்வொற்றுக்களின் மீது பன்னிருயிரும் ஏறத் தோன்றிய உயிர்மெய்களும் வணிகர்சாதியென முன்காட்டப்பட்டுள்ளது. இவற்றுள் வகர ஒற்றும் அதன்கண் உயிர் ஏறப்பிறந்த உயிர்மெய்களும் நீங்கிய, ஏனைய மூன்று ஒற்றுக்களும், அவைகளின்மீது உயிர் ஏறப்பிறந்த உயிர்மெய்களும், தண்டமிழ் எழுத்திலக்கணப்படி மொழிக்குமுன் வாராமையானும், எஞ்சிநின்ற வகரவொற்றும் அதன்கண் உயிரேறப் பிறந்த உயிர்மெய்களும், பாட்டியல் கதிப்பொருத்தத்தின்படி மொழிக்கு முன்வர உரிமை பெருத நரகர் கதியாய் இருத்தலினுனும், வணிகர்சாதியாரைப் பாட விரும்பின் அந்தணர், அரசர் என்னும் இருவருணத்தினர்க்குரிய எழுத்துக்களுள் ஒன்றைத்தான் முதன்மொழியின் முன்னர் அமைக்க இயலும்.

இஃதொப்பவே சூத்திர சாதியார்க்குமாம். ஆகையாற்ருன் "மற்றவை மயங்கினும் வரையார் ஆண்டே" எனக் கூறினுர் என்ப.

வணிகர், சூத்திரர், என்னும் இருவகை வருணத்தினர்க்கு அந்தணர் அரசர் என்னும் இருவகை வருணங்களுக்குரிய எழுத்துக்களுள் ஒன்றை முதன் மொழியின்முன் அமைத்துப் பாமாலை புனைதல் இழுக்கன்ரும்.

அந்தண்மையுடையாரைப் பாட விரும்பின் அந்தணர் சாதிக்குரிய எழுத்தையும், அரசர் சாதியாரைப்பாடுமிடத்து அரசர் சாதிக்குரிய எழுத்தையும் முதன்மொழியின் முன் அமைத்துப் பாமாலை புனைக. அங்ஙனம் பாமாலை புனைதல் மிக்க சிறப்பாம். அங்ஙனம் இயலா நிலையான் மாறுபட்டு வரினும் மாசுஇல்லை என அறிக.

மேற்கோள்:

மக்கட்சாதி நான்கிற்கும் வகுத்த
தத்தம்சாதி எழுத்தே அவரவர்க்கு
வைத்துமுன் எடுப்பின் அதுமாண்புடைத்தே
மயங்கினும் வரையார் பயன்பட வரினே. *வரையார் – நீக்கார்.*

அடுத்த இதழின்கண் தானப்பொருத்தம் சாற்றுவாம்.

(தொடரும்.)

திருப்பனந்தாள் - ஸ்ரீ காசி மடம்

திருமுறை வெளியீடுகள்

		ரூ. ந. பை
1	விநாயகர் திருமுறை	... 0 06
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு)	... 3 50
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்	... 3 00
4*	திருஞானசம்பந்தர் தேவாரம் (மூலம்மட்டும்) (புதிய பதிப்பு)	... 2 75
5*	திருநாவுக்கரசர் தேவாரம் ,, ,,	... 2 00
6*	சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) ,,	... 1 30
7*	திருவாசகம் ,,	... 0 56
8*	திருக்கோவையார்-பேராசிரியர் உரையும் பழையவுரையும் (புதிய பதிப்பு)	... 2 90
9	ஒன்பதாம் திருமுறை-திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் (மூலம்மட்டும்)	... 0 56
10*	திருமந்திரம் ,, (புதிய பதிப்பு)	... 2 25
11	பதினோராந்திருமுறை ,, (அச்சில்)	
12	அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு)	... 0 25
13	திருக்கைலாயஞானவுலா - உரையுடன்	... 0 50
14	பெரிய புராணம் (மூலம்மட்டும்) (அச்சில்)	
15*	அகத்தியர் தேவாரத்திரட்டு	... 0 37
16	திருவிளையாடற் புராணம் (மூலம்மட்டும்)	... 3 00
17	கந்தபுராணச் சுருக்கம் (மூலம்மட்டும்)	... 1 75
18	கந்தபுராணம் - முதல் மூன்று காண்டங்கள் ,,	... 2 75
19	,, யுத்த தேவகாண்டம் ,,	... 2 00
20	,, தக்ஷகாண்டம் ,,	... 1 50
21	கந்தர் அலங்காரம் - குறிப்புரையுடன்	... 0 25
22	கந்தரனுபூதி	... 0 13
23	கந்தர் கலிவெண்பா - ஆங்கிலம் ஹிந்தி மொழி பெயர்ப்புக்களுடன்	... 0 37
24	கந்தர் கலிவெண்பா - மூலம் மட்டும்	... 0 06
25	கந்தர் கலிவெண்பா - மூலமும் - உரையும்	... 0 37
26	நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	... 0 50
27	சகலகலாவல்லிமாலை - ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	... 0 06
28	திருக்குறள் - அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழி பெயர்ப்பும்	... 1 50
29	திருக்குறள் - பொருட்பால் ,,	... 2 50
30	திருக்குறள் - காமத்துப்பால் ,,	... 1 00
	ஷை 31. 32. 33 திருக்குறள் 3 புத்தகமும்	... 4 00
31	திருக்குறள் மூலமும் குறிப்புரையும்	... 0 75
32	திருக்குறள் - பொருட்பால் பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம்	... 0 13

Under No. R. No. 1485/57.
Regd No. M. 5574 குமரகுருபரன்.

33	முதுமொழி மேல் வைப்பு (குறிப்புரையுடன்)	...	0 75
34	திருவ்சாத்தானக் கல்வெழுத்துக்கள்	...	0 37
35	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா - மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ் - மதுரைக் கலம்பகம் - நீதிநெறி விளக்கம் - மதுரை மீனுட்சியம்மை இரட்டைமணி மாலை - மதுரை மீனுட்சியம்மை குறம்	...	2 75
36	திருவாரூர் நான்மணிமாலை – முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்	...	1 25
37	சிதம்பர மும்மணிக்கோவை - சிதம்பரச் செய்யுட்கோவை - தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை	...	1 00
38	பண்டார மும்மணிக் கோவை – காசிக் கலம்பகம் – சகலகலாவல்லி மாலை	...	1 00
39	சிதம்பரச் செய்யுட்கோவை	...	0 75
40	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்	...	0 50
41	பெரியபுராணம் – உரைநடை	...	2 00
42	திருவிளையாடற் புராணம் – உரைநடை	...	2 25
43	குமரகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப்பட விளக்கங்களும் கந்தர்கலிவெண்பா விளக்கப்படங்களும்	...	0 50
44	திருக்கயிலைத் திருமுறை	...	0 37
45	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும்	...	0 19
46	செந்திலாண்டவன் மகிமை	...	0 13
47	திருக்குறள் - உரைக்கொத்து - அறத்துப்பால் 3-ம் பதிப்பு	...	1 37
48	ஷை ஷை பொருட்பால் 2-ம் பதிப்பு	...	2 75
49	ஷை ஷை காமத்துப்பால் ஷை	...	1 20
50	அபிராமி அந்தாதி – தெளிவுரையுடன்	...	0 50
51	மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ் (குறிப்புரையுடன்)	...	0 50
52	கந்தரனுபூதி-தெளிவுரையுடன்	...	0 35
53	திருவாரூர்-திருப்பணுவல்கள்	..	0 10
54	திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி	...	0 10
55	பழமொழித்திருமுறை	...	0 25
56	கோளறு திருப்பதிகம்	...	0 03

மேலேகண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கல்லக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்,
"நிவாசராஜ விலாசம்" 53, பிள்ளையார் கோவில்தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை - 5.

குறிப்பு:- * இக்குறியிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறைப்பதிப்பு நிதியைச்சாரும். மற்ற நூல்களில் திருக்குறள் உரைக்கொத்து (எண் 52, 53, 54) தவிர்த்து எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.

அச்சிட்டது— குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் – '62